வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria நியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 30.03.2023 வியாழக்கிழமை இதழ் : 111 பக்கங்கள் : 16

## ஆதிசிவன் ஆலயம் அழிப்புக்கு எதிராக

# வவுனியாவில் இன்று போராட்டம் சகலரையும் திரளுமாறு அழைப்பு

வவுனியா, மார்ச் 30

**வவுனியா - நெடுங்கேணி - வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் பெயர்த்தும் - உடைத்தும் அழிக்கப்பட்டமைக்கு எதிராக இன்று வியாழக்கிழமை திட்டமிட்டபடி போராட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

வவுனியா கந்தசுவாமி ஆலய வளாகத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி வவுனியா மாவட்ட செயலகம் வரை சென்று நிறைவடையும். இந்தப் போராட்டத்துக்கு அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், வர்த்தகர் சங்கங்கள், சமய, சமூக அமைப்புகள் எனப் பல தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்தப் பேரணியில் இன, மத பேத மின்றி அனைத்து மக்களையும் தவறாது கலந்து

15

## ஈரோஸ் அலுவலக படுகொலை: இருவருக்கு மரண தண்டனை!

மட்டக்களப்பு, மார்ச் 30

ஈழவர் ஜனநாயக முன்னணி கட்சியின் (ஈரோஸ்) செயலாளர் பிரபாகரனின் 3 வயது பிள்ளை, அந்தக் கட்சியின் உறுப்பினர் என இருவரை 1997 ஆம் ஆண்டு கொலை செய்தமை, 4 பேரை துப்பாக்கியால் சுட்டும் வாளால் வெட்டியும் காயப்படுத்தியமைக்காக முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட இருவருக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை வழங்கியது.

நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி என். எம். எம். அப்துல்லாஹ் இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

கடந்த 1997ஆம் ஆண்டு மட்டக்களப்பு கோவிந்தன் வீதியில் அமைந்திருந்த ஈரோஸ் கட்சி பணிமனையில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றி வந்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்

15

## வடக்கு - கிழக்கு கோயில்களின் நிர்வாகங்களுக்கு அவசர அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

வடக்கு, கிழக்கின் கோயில்கள், ஆலய தர்மகர்த்தா சபையினர் - பரிபாலகர்கள், ஆதீன கர்த்தாக்கள், சைவ சமய அமைப்புகளை சேர்ந்தவர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லை ஆதீனத்தில் அதன் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு அனைத்து ஆலயங்கள், ஆதீனங்கள், சைவ சமய அமைப்புகளின் பிரதிநிதிகள்

15

## கல்வித்துறையில் மாற்றம் தேவை!

சஜித் பிரேமதாஸ

கொழும்பு, மார்ச் 30

இந்நாட்டில் கல்வித் துறையில் பெரும் மாற்றம் ஏற்பட வேண்டும் என்றும் சில பாடசாலைகளில் ஒரே மண்டபத்தில் பல வகுப்பறைகள் நடத்தப்படுகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர்

15

# எரிபொருட்களின் விலைகள் நள்ளிரவு முதல் குறைந்தன!

கொழும்பு, மார்ச் 30

எரிபொருட்களின் விலைகள் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக நேற்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவின் விடுத்த அறிவிப்பில்,

ஒக்ரைன் 92 ரக பெற்றோல் 60 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 340 ரூபாயாக விற்பனை செய்யப்படும்.

ஒக்ரைன் 95 ரக பெற்றோல் 135 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை 375 ரூபாயாகும்.

ஓட்டோ டீசல் 80 ரூபாய் குறைந்து 325 ரூபாயாகவும் சுப்பர் டீசல் 45 ரூபாய் குறைந்து 465 ரூபாயாகவும்,

மண்ணெண்ணெய் 10 ரூபாய் குறைந்து 295 ரூபாயாகவும் விற்பனையாகும். இந்தப் புதிய விலைகள் இன்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்தது. (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பு; சாரா உயிரிழந்தமை உறுதி!

கொழும்பு, மார்ச் 30

உயிர்த்த ஞாயிறு தற்கொலைதாரியின் மனைவியும் இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர் என்று தேடப்பட்ட வருமான சாரா ஜாஸ்மின் என்றறியப்பட்ட புலஸ்தினி மகேந்திரன் உயிரிழந்தமை டி. என். ஏ. பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டதாக



பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாரா என்ற புலஸ்தினி ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் சாய்ந்தமருது பகுதியில் உள்ள இல்லத்தில் 2019 ஏப்ரல் 26ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கொல்லப்பட்ட 15 பேரின் மாதிரிகளில் நடத்தப்பட்ட டி. என். ஏ. பரிசோதனையில்

15

## பேருந்து கட்டணமும் 12.9 வீதம் குறைந்தது!

கொழும்பு, மார்ச் 30

டீசல் விலை குறைப்புக்கு அமைய பேருந்து கட்டணம் 12.9 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய குறைந்தபட்ச பேருந்து கட்டணமாக 30 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய கட்டண திருத்தம் இன்று வியாழக்கிழமை நள்ளிரவு நடைமுறைக்கு வந்தது.

15

## முச்சக்கர வண்டி கட்டணமும் குறைவு

கொழும்பு, மார்ச் 30

எரிபொருட்களின் விலை குறைப்புக்கு அமைய முச்சக்கர வண்டிகளின் கட்டணமும் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது கிலோமீற்றரில் இருந்து 80 ரூபாய் வரை கட்டணம் குறைக்கப்படும் என்று அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் தொழிற்சங்கத்தின்

15

## புதிய பயங்கரவாத சட்டத்தை தோற்கடிக்க ஒன்றிணைவோம்!

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



கொழும்பு, மார்ச் 30

"புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பயமுறுத்துகிறது", என்று கூறியுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, "இந்த சட்டமூலத்தை தோற்கடிக்க அனைத்து பிரஜைகளும் ஒன்றிணைய வேண்டும்" என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "எங்களுடைய அரசியல் விசுவாசங்களை ஒதுக்கி விட்டு, இந்த இடத்தில் நாம்

15

## 'கிறிப்டோ' நாணயத்தில் முதலீடு செய்யாதீர்கள்

### மத்திய வங்கி அறிக்கை

கொழும்பு, மார்ச் 30

பொதுமக்கள் பாடுபட்டு உழைத்த தமது பணத்தைப் பாதுகாக்குமாறும் இணையத்தளம், ஏனைய ஊடக வழிகள் மற்றும் நேரடியாக எவர் மூலமாக வழங்கப்படும் எண்ணிம (கிறிப்டோ) நாணய திட்டத்தில் முதலீடு செய்யாமல் இருக்குமாறு இலங்கை மத்திய வங்கி எச்சரித்துள்ளது.

மத்திய வங்கி நேற்று வெளியிட்ட விசேட அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

"கிறிப்டோ" என்று பொதுவாக குறிப்பிடப்படும் எண்ணிம நாணயங்களை ஊக்குவித்தல் மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பதை வசதிப்படுத்தல் அத்துடன் விற்பனை செய்தல் என்பனவற்றில் ஈடுபடுகின்றவர்களை அத்தகைய நடவடிக்கைகளிலிருந்து விலகியிருக்க

15

## மாதம்பை மதமாற்ற கூட்டத்துக்கும் தடை!

சிவசேனை அமைப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

புத்தளம் - மாதம்பை, சிலாபம் பகுதிகளில் சைவர்களை மதம் மாற்றும் நோக்குடன் நடத்தப்பட விருந்த கிறிஸ்தவ பிரசார கூட்டம் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டது - என்று சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரசாரக் கூட்டத்துக்கு தமிழ்நாட்டில் இருந்து மோகன் இலா சாரசு என்பவர் தலைமையில் வந்த 10 பேரும் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தினரின் விசாரணையின் பின்னர் நாடு கடத்தப்படவுள்ளனர் என்றும் அந்த அமைப்பு தெரிவித்தது.

தமிழ்நாட்டிலிருந்து வந்த இந்தக் குழுவினர் மதமாற்றப் பரப்புரைக்கு வருகிறார்கள், இலங்கைச் சட்டங்களை மீறுகிறார்கள். இவர்களை தடுத்து

15

## இப்படியும் நடக்கிறது...!

நீச்சல் குளத்தில் தண்ணீர் அடிக்கடி கெட்டு விடுவதை அறிந்தார் ஹோட்டல் முதலாளி. காவல்காரனை அழைத்து ஒரு வாரத்துக்கு யாரையும் நீச்சல் குளத்தில் குளிக்க அனுமதிக் காதே, என்றார்.

அன்று மாலையே இளம் பெண் ஒருத்தி குளிப்பதற்காக அங்கு வந்தாள். தான் அணிந்திருந்த ஆடையை ஒவ்வொன்றாகக் கழற்றிப் போட்டாள். நீச்சல் குளத்தில் இறங்கத் தயாரானாள்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த காவல்காரன் "இங்கு யாரும் குளிக்கக்கூடாது" என்றான்.

"நான் உடைகளைக் கழற்றுவதற்கு முன்னரே ஏன் இதைச் சொல்லி இருக்கக்கூடாது" என்று கோபத்துடன் கேட்டாள்.

அதற்கு அவன், "இங்கு யாரும் குளிப்பதைத் தடுப்பது தான் என் வேலையே தவிர, உடைகளைக் கழற்றும்போது தடுப்பது என் வேலை அல்ல" என்றான்.

நமது அரசியல்வாதிகள் இப்போதெல்லாம் எல்லாவற்றையும் எதிர்ப்பதுதான் தங்கள் வேலை என்று முடிவெடுத்து விட்டார்களோ தெரியவில்லை. அதனால்தான் தமது வேலையை மாத்திரம் செய்கின்றனரோ!

நாவலர் கலாசார மண்டபத்தை இந்து கலாசாரத் திணைக் களம் மீளக் கையேற்க எடுக்கும் முயற்சிக்கு எதிராக போட்டி போட்டு எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றனர்.

முதலில், யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயர் வி. மணிவண்ணன் தலைமையிலான அணியின் முக்கியஸ்தரான முன்னாள் மாநகர சபை உறுப்பினர் வரதராஜா பார்த்தீபன், ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக போராட்டம் நடத்தப்படும் என்று அறிவித்தார். ஆனால், அவர் போராட்டத்துக்கு செல்வதற்கு முன்னதாகவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அங்கே போராட்டத்தைத் தொடக்கிவிட்டனர்.

அதற்கு தலைமை தாங்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் எம். பியான கஜேந்திரன், ஒலிபெருக்கியை வைத்திருந்தவாறு கோஷமிட்டுக் கொண்டிருந்தமையைக் காணமுடிந்தது.

நாவலர் கலாசார மண்டபம் என்பது தமிழர்களின் கலாசார அடையாளம் என்றும் அதனை மத்திய அரசாங்கம் அபகரிக்க நினைப்பதாகவும் அந்த கலாசார மண்டபத்தை புத்தசாசன அமைச்சின்கீழ் கொண்டுவர முயற்சிப்பது படிப்படியாக பௌத்த மேலாதிக்கத்தை திணிக்கும் முயற்சி எனவும் வழக்கம்போல அவர் முழக்கமிட்டதைக் காணமுடிந்தது.

நாவலர் கலாசார மண்டபம் இந்து கலாசார திணைக்களத்தால் கட்டப்பட்ட ஒன்று. அதனை நிர்வகிப்பதற்காக அது பல ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணம் மாநகர சபையின் பராமரிப்பில் கொடுக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட காலத்துக்கு அந்த நாவலர் மண்டபம் மாநகர சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த காலம், அதாவது குத்தகைக்கு வழங்கப்பட்ட ஒரு சொத்தை குறிப்பிட்ட குத்தகைக் காலம் முடிந்ததும் தாம் பொறுப் பேற்பதுபோல, இந்து கலாசார திணைக்களம் அந்த நிலையத்தை மீளவும் தம்மிடம் கையளிக்கு மாறு கோரிக்கை விடுத்தபோது, அதனை ஏற்க மறுத்த மாநகர சபை, அது தொடர்பாக சபையில் தீர்மானங்களையும் நிறைவேற்றியது.

பின்னர் இரு தரப்பினரும் இணைந்து ஒரு பொது உடன்பாட்டுக்கு வந்திருந்தன என்று கூறப்படுகின்றது. அதாவது, இரண்டு தரப்பினரும் இணைந்து அதனை நிர்வகிப்பது என்பதே அந்த முடிவு.

ஆனால், மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகம் தனது பதவிக்காலத்தை முடித்ததும், மாநகர நிர்வாகம் ஆணையாளரின் நிர்வாகத்தின்கீழ் வந்ததும் அதனை முழுமையாக இந்து கலாசாரத் திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவிட்டார்.

அவர் அவ்வாறு உத்தரவிட்டது சரியானதுதான் என்று நாம் வாதிடப்போவதில்லை. ஆனால், இரு தரப்பினரும் இணைந்து அதனை நிர்வகிப்பது என்ற முடிவை மாற்றக்கூடாது என்று கோரிக்கையை விடுப்பதற்கு பதிலாக, நமது தலைவர்கள் அந்த விவகாரத்தை வைத்து மக்களை உசுப்பேற்றும் வேலை யையே செய்துகொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

யாழ்ப்பாண மக்களுக்காக என்றே பல கோடி ரூபாய் செலவில் இந்தியா கட்டிக்கொடுத்த யாழ்ப்பாண கலாசார நிலையத்தை பொறுப்பெடுத்து நிர்வகிக்க முடியாத யாழ்ப்பாணம் மாநகர சபையின் கையாலாகாத்தனத்தாலேயே அந்த நிலையம் இன்று மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது.

நாவலர் மண்டபம் என்பது எமது கலாசாரத்தின் அடையாளம் என்று முன்னணியினர் சொல்கின்றார்கள்.

அப்படியெனில், அந்த மண்டபத்தை சென்று பார்த்தால் தமிழரின் கலாசாரத்தை கண்டு கொள்ளலாம் என்கின்றார்களா? ஒருதடவை சென்று பார்த்து, அது எவ்வளவு 'சுத்தமாக' இருக்கின்றது என்பதையும் கவனித்தால் நல்லது!

**- ஊர்க்குருவி**

# வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் குறையாது!

கொழும்பு, மார்ச் 30

எரிபொருளின் விலை குறைந்துள்ள போதிலும் பாண் உள்ளிட்ட வெதுப்பக பொருட்களின் விலையை இப்போது குறைக்க முடியாது என்று அகில இலங்கை வெதுப்பக சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்த்தன கூறுகிறார்.

கடந்த காலங்களில் எரிபொருள் விலை அதிகரித்த போது வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை அல்லது குறைக்கப்படவில்லை. எதிர்வரும் சிங்கள புத்தாண்டு காலத்தில் எரிபொருள் விலைகள் மேலும் குறையும்பட்சத்தில், இறக்குமதி செய்யப்படும் மூட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாத நிலையில், புத்தாண்டு சமயத்தில் பாண், கேக் மற்றும் பிற பேக்கரி பொருட்களின் விலைகள் கண்டிப்பாக குறைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

வெதுப்பக பொருட்களின் விலையை குறைக்கும் வகையில் எரிபொருளின் விலை திருத்தம் செய்யப்படவில்லை எனவும் வெதுப்பக தொழிலில் டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய், எரிவாயு மற்றும் விறகுகள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# கிளிநொச்சியை சேர்ந்த 8 பேர் தமிழகத்தில் தஞ்சமடைந்தனர்



இராமேஸ்வரம், மார்ச் 30

இலங்கையிலிருந்து அகதிகளாக தனுஷ்கோடி வந்த இலங்கை தமிழர்கள் 8 பேர், கடற்கரை கண்காணிப்பு பொலிஸாரின் விசாரணைக்குப் பின் மண்டபம் முகாமில் ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் கடந்த ஆண்டு மார்ச் முதல் இதுவரை இலங்கை தமிழர்கள் 225 பேர் அகதிகளாக தனுஷ்கோடி வந்துள்ளனர்.

இந்நிலையில் இலங்கை கிளிநொச்சி மாவட்டம் தருமபுரத்தைச் சேர்ந்த சசிக்குமார் (47), அவரின் மனைவி உமாதேவி (42) இவர்களின் இரு மகள்கள், பார்வதி (70), மகேந்திரா (50) என்பவர் உட்பட 2 குடும்பங்களை சேர்ந்த 8 பேர் திங்கட்கிழமை இரவு தலைமன்னாரில் பைபர் படகு மூலம் புறப்பட்டனர்.

தனுஷ்கோடி அருகே உள்ள மணல் தீடைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை வந்திறங்கினர்.

தகவலறிந்த கடலோர காவல் படை மணல் தீடையிலிருந்த இலங்கைத் தமிழர்கள் 8 பேரை படகு மூலம் தனுஷ்கோடி அரிச்சல்முனை கரைக்குக் கொண்டு வந்தனர்.

# இந்திய முட்டைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது

கொழும்பு, மார்ச் 30

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளுக்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் அது குறித்த அறிக்கை வர்த்தக அமைச்சுக்கு நேற்று புதன் கிழமை அனுப்பி வைக்கப்பட்டது என்று விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் முட்டைகளுக்கு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் அனுமதியும் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ, குறித்த முட்டை ஒன்ற 35 ரூபாய் என்ற விலையில் ஹோட்டல் மற்றும் வெதுப்பக உரிமையாளர்களுக்கு விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சந்தையில் முட்டையின் விலையை கட்டுப்படுத்தும் வகையிலும், முட்டை தட்டுப்பாட்டுக்கு தீர்வாகவும் இந்தியாவில் இருந்து 20 இலட்சம் முட்டைகளை இலங்கைக்கு இறக்குமதி செய்ய வர்த்தக அமைச்சு அண்மையில் நடவடிக்கை எடுத்தது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 20 இலட்சம் முட்டைகளும் கடந்த 23 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த போதும் அனுமதிக்கான மதிப்பீடுகள் செய்யப்படும் வரை துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# கலப்பு உரங்களின் விலை 50சதவீதத்தால் குறைப்பு!

கொழும்பு, மார்ச்30

மரக்கறிகள் உட்பட ஏனைய பயிர்களுக்கு பயன்படுத்தப்படும் கலப்பு உரங்களின் விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன என்று வர்த்தக உர நிறுவனத்தின் தலைவர் ஜகத் பெரேரா விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் தெரிவித்துள்ளார்.

தெங்கு, தேயிலை மற்றும் கறுவா போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படும் உரம் 50வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

நெல் மற்றும் சோளப் பயிர்களுக்கு அரசாங்கத்தின் உரத் திட்டத்தின் கீழ் இரசாயன உரங்கள் வழங்கப்பட்ட போதிலும், ஏனைய பயிர்களுக்கு உரங்கள் கிடைக்காமை தொடர்பில் விவசாயிகள் தொடர்ந்து அமைச்சிடம் முறைப்பாடு செய்து வந்தனர்.

அந்த உண்மையைக் கருத்தில்கொண்டு, நெல் மற்றும் சோளம் தவிர்ந்த ஏனைய பயிர்களுக்குப் பயன்படுத்தக்கூடிய கலப்பு உரத்தை தயாரிக்குமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, அரசாங்கத்துக்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களின் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

தற்போது சந்தையில் விற்பனை செய்யப்படும் கலப்பு உரங்களின் விலையை விட மிகக் குறைந்த விலையில் உயர் தரத்துடன் பல புதிய கலப்பு உர வகைகளை இலங்கை உர நிறுவனம் மற்றும் வர்த்தக உர நிறுவனம் அறிமுகப்படுத்தியது.

இதன்காரணமாக சந்தையில் கலப்பு உரங்களின் விலை 50 சதவீதம் வரை குறைந்துள்ளது.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
30.03.2023 வியாழக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அனைவரும் இந்துவாக திரட்சிபெற வேண்டும்!

வெடுக்குநாறி மலையிலுள்ள சிவனாலய விவகாரத்தைத் தொடர்ந்து பல பக்கங்களிலும் கண்டனங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான கண்டனங்கள் வழமையானவை. இது போன்ற சம்பவங்கள் இடம்பெறும்போது, கண்டனங்களை முன்வைப்பதும் - பின்னர் சில நாட்கள் - வாரங்களுக்கு பின்பாக வழமைபோல் ஏனைய விடயங்களில் மூழ்கிப் போவதுமே பல வருடங்களாக இடம்பெற்று வருகின்றன. இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் இவ்வாறு கண்டனங்களிலும் ஆர்பாட்டங்களிலும் காலம் கடத்துவது?

முதலாவது பிரச்னை இது ஒரு மதம் தொடர்பானது. தமிழ்த் தேசியத்தின் அடிப்படையாக மதச்சார்பின்மை இருக்க வேண்டுமென்பது சிலரின் வாதமாக இருக்கின்றது. அவர்களின் வாதத்தை ஏற்றுக்கொள்வதாயின், வெடுக்குநாறி மலை சிவனாலய விவகாரம் மட்டுமல்ல குருந்தூர் மலை விவகாரமும் அனைத்துமே தமிழ்த் தேசிய விவகாரமல்ல.

ஆனால், அரசியல்வாதிகளும் சிவில் சமூக அமைப்புகளும் அத்துடன், ஊடகங்களும் - இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும்போது அதனை தமிழர்களுக்கு எதிரான விடயங்களாவே முன்வைக்கின்றன. வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரையில் பௌத்த மயமாக்கம் என்பது அடிப்படையிலேயே இந்துக்களின் அடையாளமுள்ள இடங்களில்தான் நடைபெறுகின்றது. அல்லது அவ்வாறான குற்றச்சாட்டுகள் அனைத்தையும் ஏதோவொரு வகையில் இந்துக்களின் கலாசார அடையாளமுள்ள இடங்களை அடிப்படையாகக் கொண்டுதான் இடம்பெறுகின்றன. மன்னாரிலுள்ள மாதா சுரூபங்கள் உள்ள இடங்களில் அல்லது கிறிஸ்தவர்களின் வாழ்வியலோடு தொடர்புடைய இடங்களில் பௌத்த மயமாக்கல் என்னும் பிரச்னைகள் ஏற்படுவதில்லை.

கத்தோலிக்க தேவாலயங்கள் அமைந்துள்ள இடங்களில் புத்தர் சிலை நிறுவப்பட்டதாகவோ அல்லது பௌத்த மயமாக்கல் முயற்சிகள் இடம்பெறுகின்றன என்றோ எந்தவொரு குற்றச்சாட்டுக்களும் கத்தோலிக்க மதத் தலைமைகளால் முன்வைக்கப்படுவதில்லை. இந்த நிலையில், பௌத்த மயமாக்கலின் இலக்காக இருப்பது இந்துக்களின் வாழ்வியலை அடையாளப்படுத்தும் இடங்கள் மட்டுமேயாகும். இதனை முதலில் தமிழ்த் தேசிய கட்சிகள் என்போர் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, இதனை பிரத்தியேகமாக கையாளுவதற்கான பொறிமுறைகள் தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் கவனம்கொள்ள வேண்டும். தமிழ்த் தேசிய அரசியல் நோக்கில் இந்த விடயத்தை அணுகுவது அடிப்படையிலேயே தவறானது. ஏனெனில், தமிழ்த் தேசியத்தை மதச்சார்பற்றதாக பேணிப்பாதுகாக்க வேண்டுமென்று எண்ணுபவர்களுக்கு, சிவலிங்க வழிபாட்டுக்குரிய இடம் தொடர்பில் அக்கறை எதற்கு? தமிழ்த் தேசியத்துக்கு மதமே இல்லை என்றால், அதன் பின்னர் பௌத்த - இந்து முரண்பாடுகளில் தமிழ்த் தேசியவாதிகள் ஏன் தலையீடு செய்ய வேண்டும்? இல்லாவிட்டால், தமிழ்த் தேசியத்தையும் இந்து மதத்தையும் பிரித்துப்பார்க்க முடியாதென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். மதில் மேல் பூனையாக இருக்கக்கூடாது.

இந்த விடயம் தொடர்பில் எமது பரிந்துரை - வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் கட்சிகளும் இந்த விடயத்தில் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். வடக்கு - கிழக்கிலுள்ள இந்து தமிழ் மக்களின் கலாசார வாழ்வியலை அடையாளப்படுத்தும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் பாதுகாக்கும் கடப்பாடு அனைத்து இந்துக்களுக்குமானது. எனவே, இந்த விடயத்தில் அரசாங்க ஆதரவு தமிழர், தமிழ்த் தேசிய தமிழர்கள் மற்றும் தமிழ் தேசியத்துக்கு எதிரான தமிழர்கள் என்னும் பாகுபாடிருக்கக்கூடாது.

வடக்கு - கிழக்கிலுள்ள இந்துக்களின் தொல்பொருள் சான்றாதாரங்களை தனித்துவமாகப் பாதுகாப்பதற்கு இந்து தொல்பொருள் பிரிவொன்றை நிறுவ வேண்டுமென்னும் கோரிக்கையை அனைத்து தமிழ் இந்து அரசியல் பிரதிநிதிகளும் ஓரணியாக முன்வைக்க வேண்டும். இதில் வடக்கு - கிழக்கு - மலையகம் அனைவரும் ஓரணியில் இந்துக்களாக நிமிர வேண்டும். அவ்வாறானதோர் அணுகுமுறையின் ஊடாக மட்டுமே, இந்த விடயத்தை எதிர்காலத்தில் கையாள முடியும்.

அவ்வாறில்லாது, இந்துக்களின் கலாசார அடையாளங்கள், சான்றுகள் பிரச்னைக்கு உள்ளாகும்போது, அதனை தமிழ்த் தேசியத்தின் பெயரால் கையாள முற்படுவது தவறானது. ஏனெனில், இந்து விவகாரத்தை தமிழ்த் தேசியத்தின் அடிப்படையில் கையாளும் போது, அது சிங்கள - பௌத்தவாதிகளுக்கே சாதகமாகும். அவர்கள் இதனை இலகுவாக அரசியலாக்கி, தங்களின் காரியத்தை வெற்றிகொண்டுவிடுவார்கள். குருந்தூர் மலை விவகாரம் இதற்கு ஒரு நல்ல உதாரணம். குருந்தூர் மலை விவகாரத்தில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலையிட்டு எதனை சாதிக்க முடிந்தது. அதனை தடுத்துநிறுத்த முடிந்ததா? இல்லையே. இந்துவாக அனைவரும் திரளுவதன் மூலம் மட்டுமே இந்த விவகாரத்தை கையாள முடியும்.

# வவுனியாவில் இன்று போராட்டம்; தமிழ் மக்கள் கூட்டணி ஆதரவு!

*யாழ்ப்பாணம், மார்ச் 30*

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயம் அழிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று வியாழக்கிழமை வவுனியாவில் நடக்கும் போராட்டத்துக்கு தமிழ் மக்கள் கூட்டணி ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் நேற்று அனுப்பிய அறிக்கையில்,

வவுனியா வெடுக்குநாறி மலை ஆதிசிவன் கோயில் அழிக்கப்பட்டமை மற்றும் கடந்த சில மாதங்களாக குருந்தூர் மலை, கன்னியா உட்பட பல வணக்கத்தலங்களில் சிவ வழிபாடு தடுக்கப்பட்டு குறித்த இடங்களை பௌத்த மரபுரிமைகளாக - விகாரைகளாக மாற்ற தொல்பொருள் திணைக்களமும் படையினரும் சேர்ந்து நடவடிக்கையில் இறங்கியுள்ளமை ஆகியவற்றை நாங்கள் வெகுவாகக் கண்டிக்கின்றோம்.

முக்கியமான ஒரு விடயத்தை அரசாங்க தொல்பொருள் திணைக்களத்தினரும் படையினரும் மறந்துவிட்டார்கள். தற்போது இந்துக்கள் வணங்கும் வணக்கஸ்தல வளாகங்களில் பௌத்த எச்சங்கள் இருப்பது உண்மை என்றால் அவை தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த காலத்தவையாக இருக்க வேண்டும். அதை முதலில் திணைக்களம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் தமது பௌத்த சின்னங்களை பாதுகாக்க வேண்டும் என்று எண்ணாத நிலையில் சிங்கள பௌத்தர்கள் இந்தக் காரியத்தில் இறங்கியமை, குறித்த சின்னங்கள் இருக்கும் இடங்கள் சிங்கள - பௌத்த காலத்துக்கு உரியவை என்று காட்டுவதற்கேயாகும். ஆனால், சிங்கள - பௌத்தர்கள் குறித்த இடங்களில் என்றென்றுமே வாழ்ந்ததில்லை. தமிழ் பௌத்த கால எச்சங்களை சிங்கள பௌத்த கால எச்சங்கள் என்று காட்டத் தொல்பொருள் திணைக்களம் முயற்சிக்கும் அவர்களின் அந்த கரவான நடவடிக்கை உடனே நிறுத்தப்படவேண்டும்.

முதலில் குறித்த எச்சங்கள் எந்தக்காலத்தவை என்று அறிந்து அந்தக்காலத்தில் சிங்கள மொழியும் சிங்கள இனமும் இருந்தனவா என்று அறிந்த பின்னர், இவை பற்றி தமிழ் மக்களுடன் சேர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபடலாம். அவை தமிழ் பௌத்த கால சின்னங்கள் எனில் மாகாண சபைகளுக்கூடாகவே இவை பற்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தான்தோன்றித்தனமாக மத்திய அரசின் கீழான தொல்பொருள் திணைக்களம் தமது தேவையற்ற இன ரீதியான மத ரீதியான இவ்வாறான செயல்களை உடன் நிறுத்த வேண்டும்.

எமது மக்கள் யாவரும் ஒன்று கூடி கண்டிப்பு செலுத்தும் போராட்டத்துக்கு நானும் எனது கட்சியான தமிழ் மக்கள் கூட்டணியும் எமது மனமார்ந்த ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# பொலிஸாரை தாக்கியவர் சுட்டுக்கொல்லப்பட்டார்!

*கொழும்பு, மார்ச் 30*

புத்தளம் - வென்னப்புவ பிரதேசத்தில் உள்ள தென்னந்தோப்பில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை வாளால் தாக்கியதுடன், மற்றொரு பொலிஸ் கான்ஸ்டபிளை தாக்க முற்பட்டார் என்று கூறப்படும் நபர் ஒருவர் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தார் என்று வென்னப்புவ தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர் குற்றவாளிகள் பட்டியலில் உள்ளவர் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாள்வெட்டுத் தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் மாரவில ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அவரின் ஒரு கையும் ஒரு விரலும் வாள் வெட்டுக்கு இலக்காகின என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர், 15 நகைத் திருட்டு வழக்குகளிலும் கொலை வழக்கு ஒன்றிலும் தொடர்புபட்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இளங்கலைஞர் மன்ற இசைவிழா

*யாழ்ப்பாணம், மார்ச் 30*

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் 53ஆவது ஆண்டு இசைவிழாவும் தங்கப் பரிசு கலைப் போட்டிகளும் நாளை 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பித்து, ஏப்ரல் 2ஆம் திகதி வரை மூன்று தினங்கள் நடைபெறுகின்றன.

தினமும் மாலை 4.30 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

முதலாம் நாள் நிகழ்ச்சிக்கு யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட இசை விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன், இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு பேராசிரியர் என். சண்முகலிங்கன், மூன்றாம் நாள் நிகழ்ச்சிக்கு ‘இசைக்கலைமணி’ வாசஸ்பதி றஜீந்திரன் ஆகியோர் தலைமை வகிப்பர்.

நல்லூர், சட்டநாதர் வீதியிலுள்ள மன்ற மண்டபத்தில் இந்த இசைவிழா நடைபெறுகிறது.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மார்ச் - 30 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - பங்குனி 16
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : நவமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். பூர்வீக சொத்துப் பிரச்சினைக்கு சுமூக தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் உழைப்பிற்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். யாரை நம்புவது என்கிற குழப்பத்திற்கு ஆளாவீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**கடகம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**சிம்மம்**
முழு தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கன்னி**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உறவினர் நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உதவி செய்வார்கள்.

**துலாம்**
கடந்த 2 நாட்களாக இருந்த சோர்வு அசதி நீங்கி உற்சாகம் அடைவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்பு கள் தேடி வரும். ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். சிலரின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள்.

**தனுசு**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். தாயாரின் உடல் நிலை சீராகும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும்.

**மகரம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் இராஜதந்திரத்தால் லாபத்தை அதிகரிப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கும்பம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். உங்களை சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. புதுமை படைக்கும் நாள்.

**மீனம்**
எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பங்கு தாரர்கள் ஒத்துழைப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

# எடப்பாடி பழனிச்சாமி பொதுச் செயலரானார்





சென்னை, மார்ச் 30

அ.தி.மு.கவில் அதிகாரம் மிக்க பெரிய பதவியாக இருக்கும் பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி அறிவிக்கப்பட்டார்.

1972ஆம் ஆண்டு அ.தி.மு.க.வை தொடங்கிய எம். ஜி. ஆர். கட்சியின் நிறுவுநர் தலைவராகவும் பொதுச்செயலாளராகவும் பதவி வகித்தார். 1978ஆம் ஆண்டு வரையில் எம். ஜி. ஆர். வசமே இருந்த இந்த பதவியில் பின்னர் நாவலர் நெடுஞ்செழியன் அமர்ந்தார். 2 ஆண்டுகள் அவர் இந்த பொறுப்பில் இருந்தார்.

1989ஆம் ஆண்டு அ. தி. மு. க. பொதுச்செயலாளராக ஜெயலலிதா அமர்ந்தார். 27 ஆண்டுகள் 300 நாட்கள் என அதிகாரம் மிக்க இந்த பதவியை ஜெயலலிதா தனது ஆளுமையால் அலங்கரித்தார். ஜெயலலிதா மறைவுக்கு பிறகு சசிகலா 48 நாட்கள் மட்டுமே பொதுச்செயலாளராக இருந்தார். நேற்று முன்தினம் 7ஆவது பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கட்சியில் எடுக்கப்படும் அனைத்து முடிவுகளுக்கும் இறுதியாக பொதுச்செயலாளரே கையெழுத்திட வேண்டும் என்பது அ.தி.மு.க. விதிகளில் முக்கியமானதாக இருந்து வருகிறது. இதன்மூலம் ஒற்றை தலைமையாக எடப்பாடி பழனிசாமி பொதுச்செயலாளர் பதவியை எட்டிப்பிடித்துள்ளார்.

# பன்னீர்செல்வத்தின் வழக்கு விசாரணை இன்று நடக்கும்!

சென்னை, மார்ச் 30

அ. தி. மு. க. பொதுக்குழு வழக்கில் ஓ. பன்னீர்செல்வம் (ஓ. பி. எஸ்) மற்றும் அவரின் ஆதரவாளர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுக்கள் மீது இன்று வியாழக்கிழமை விசாரணை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அ. தி. மு. க. பொதுக்குழு வழக்கில் பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனுக்களை தனி நீதிபதி குமரேஷ்பாபு நேற்று முன்தினம் நிராகரித்து தீர்ப்பளித்தார். காலை 10.30 மணிக்கு அவர் தீர்ப்பளித்து முடித்தார்.

உடனே இந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய உள்ளதாகவும், இந்த மனுவை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்றும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதை ஏற்று நேற்று இந்த வழக்கு விசாரணை எடுக்கப்பட்டது. இதன்போது, நீதிபதி உத்தரவின் சான்று அளிக்கப்பட்ட நகல் இல்லாததால் பன்னீர் செல்வம் மேல்முறையீட்டு வழக்கு விசாரணை இன்று வியாழக்கிழமம நடைபெறும் என்று இரு நீதிபதிகள் அமர்வு அறிவித்தது.

(ஐ)

# வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா காங்கிரஸ் கட்சியினர் இன்று பேரணி!



ஈரோடு, மார்ச் 30

வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாவையொட்டி ஈரோட்டில் இருந்து வாகனப் பேரணியை காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி தொடங்கி வைத்துள்ளார்.

கேரள மாநிலம் வைக்கத்தில் தீண்டாமையை எதிர்த்து நடந்த போராட்டத்தின் நூற்றாண்டு விழா நினைவாக, தந்தை பெரியாரின் நினைவிடத்துக்கும், ஈரோட்டுக்கும் வந்து பெரியாருக்கு மரியாதை செலுத்தி விட்டு, வைக்கம் நிகழ்வுகளை நடத்துவது என கேரள காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. அதை யொட்டி, கேரள காங்கிரஸ் குழுவினர் நேற்றுமுன்தினம் ஈரோடு வந்தனர்.

இன்று வைக்கத்தில் நடைபெறும் நூற்றாண்டு விழாவை யொட்டி ஈரோட்டில் இருந்து வாகனப்பேரணி நேற்று முன்தினம் புறப்பட்டது. (ஐ)

# வெடுக்குநாறிமலைக்கு செல்வேன் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்படும்!

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்



**கொழும்பு, மார்ச் 30**

**அத்துடன், வெடுக்குநாறிமலையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆதி சிவலிங்கம் சிலை உடைத்து வீசப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி முழுமையானதோர் அறிக்கையை வழங்குமாறு பொலிஸ்மா அதிபரிடமும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.**

கொழும்பு, மார்ச் 30

அத்துடன், வெடுக்குநாறி மலையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆதி சிவலிங்கம் சிலை உடைத்து வீசப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி முழுமையானதோர் அறிக்கையை வழங்குமாறு பொலிஸ்மா அதிபரிடமும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா, நெடுங்கேணியில் அமைந்துள்ள வெடுக்குநாறி மலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஆதி சிவலிங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிலை உடைத்து வீசப்பட்டிருந்தது. அத்துடன், அங்கிருந்த ஏனைய தெய்வ விக்கிரகங்களும் மாயமாகின.

இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜீவன் தொண்டமான் கருத்து வெளியிடுகையில்,

“சம்பவம் தொடர்பில் அறிந்த பின்னர் நானும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தினோம். உரிய விசாரணைகளை முன்னெடுத்து, சட்டத்தை செயல்படுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். நானும் இது தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளேன்.

இலங்கை முன்னேறுவதற்கு இன, மத நல்லிணக்கம் மிக முக்கியம். அதனை ஏற்படுத்துவதற்கு எமது அரசாங்கம் தீவிரமாக செயல்பட்டு வருகின்றது. இந்நிலையில், அதனை சீர்குலைக்கும் வகையில் இடம்பெறும் சம்பவங்கள் அனுமதிக்க முடியாது. அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ” - என்றார்.

(ஐ)

# எல்லை மீள்நிர்ணய அறிக்கையை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்!

## சமத்துவக் கட்சி மகிந்தவிடம் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 30

எல்லை மீள்நிர்ணயம் தொடர்பான பிரேரணைகள் மாவட்ட செயலர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு ஊடாக பெற்றுக கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குழுக்கள் எவற்றிலும் மக்கள் அமைப்புகள், மக்கள்பிரதிநிதிகள், அல்லது பொது மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகள் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டு, தங்களின் எஜமானர்களை திருப்திசெய்யும் பிரேரணைகள், மாவட்ட செயலர்கள் அடங்கிய குழுவினரால் மிகவும் நுட்பமான வகையில் உள்சேர்க்கப்பட்டுள்ளன. எனவே, இது மீள் பரிசீலனை செய்யப்படல் வேண்டும் என சமத்துவக் கட்சி எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவுக்கு கடிதம் ஒன்றை கையளித்துள்ளது.

இந்தக் கடிதம் நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள அவரின் அலுவலகத்தில் நேரடியாக சமத்துவக்கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமாரால் நேரடியாக கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கள யதார்த்தத்தையும் சமூக கட்டமைப்புகளையும் கருத்தில் கொள்ளாமல், வெறும் மூடிய அறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் முன்மொழிவுகள், சமூக இயங்கியலை, அதன் ஒருங்கிசைவை எவ்வாறு அழிவுக்கு இட்டு செல்லும் என்பது ஆராயப்பட்டிருக்கப்படவில்லை. முற்றிலும் பொருத்தமற்ற ஆளணியினரை கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் மேற்படி முன்வரைபுகள், சமூக வளர்ச்சியில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என்ற அச்சம் சமத்துவ கட்சி அடங்கலான அனைத்து அரசியல் கட்சியினருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் புதிய எல்லை நிர்ணயத்தின் மூலம் பல பிரதேசங்களில் (வட்டாரங்களில்) சமூகப் பிளவுகள் ஏற்படக்கூடிய நிலை ஏற்படுவதற்கான சூழலே அதிகமாகக் காணப்படுகிறது. மட்டுமல்ல, ஏற்கனவே இருந்த வட்டார எல்லைகளை விரித்து அகலமாக்கும்போது குறித்த பிரதேசங்களில் (கிராம நிலையில் அல்லது கிராமசேவகர் நிலையில்) உரிய உறுப்பினர்களைத் தெரிவு செய்ய முடியாத நிலை மக்களுக்கு ஏற்படவுள்ளது. இதனால் அபிவிருத்தி தொடக்கம் மக்கள் பிரதிநிதித்துவம் வரையில் ஏகப்பட்ட பிரச்னைகள் ஏற்படும். ஆகவே இது சமூகப் பிளவுகளை ஆழமாக உண்டாக்கும்.

புதிய வட்டார எல்லைகளில் பலவும் பொருத்தப்பாடற்றவையாகக் காணப்படுகின்றன. இதனை மீள்பார்வைக்கு உட்படுத்த வேண்டும். இவ்வாறு வகுக்கப்படுமிடத்து அபிவிருத்திப் பணிகளைச் செய்வதற்கும் சபையில் உரிய பிரதேசங்களின் குரலை ஒலிப்பதற்கும் நெருக்கடிகளே அதிகமாக இருக்கும். இதுவும் சமூகக் கொந்தளிப்பை உண்டாக்கும்.

மேலும், கடந்த ஜனவரி மாதம் முதல் வாரத்தில் தங்களுக்கும், சிறுபான்மை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில், உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக நடைபெற்ற சந்திப்பொன்றின் போது, கட்சிகளின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் கவனத்துடன் பரிசீலக்கப்படும் என்று தங்கள் வழங்கிய வாக்குறுதியை தற்போது நினைவுபடுத்த விரும்புகிறேன்.



மேற்படி சந்திப்பின்போது, தற்போதுள்ள தேர்தல் முறைகளிலும் உறுப்பினர் எண்ணிக்கையிலும் ஏற்படக்கூடிய எந்தவொரு மாற்றமும், இலங்கையில் வாழக்கூடிய சிறுபான்மை சமூகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் புதிய தேர்தல் முறையொன்றின்கீழ் குறைந்தளவு எண்ணிக்கையில் உறுப்பினர் தேர்வு இடம்பெறுமாயின் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் சமுதாயங்கள் மேலும் புறக்கணிக்கப்படும் அபாயம் இருப்பதையும் ஒருமனதோடு சுட்டிக்காட்டியிருந்தார்கள்.

அத்துடன், விகிதாசார பிரதிநிதித்துவ முறை மட்டுமே இலங்கை போன்ற பன்முக சமுதாயங்கள் வாழக்கூடிய நாட்டுக்கு பொருத்தமானதும் சரியானதுமாகும் என்பதும் அந்த சந்திப்பின் போது வலியுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# எழுவைதீவின் பனை வளத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை!

## சிறீதரன் எம். பி. உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

எழுவைதீவின் பெருவளமாக உள்ள பனை வளம் அழிக்கப்படுவதை தடுப்பதற்கும், கருவேல மரங்களின் பரவலை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் எழுவைதீவு மக்களிடம் தெரிவித்துள்ளார்.

எழுவைதீவு மக்களும், கடற்றொழிலாளர்களும் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்னைகள் குறித்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் அங்கு நடைபெற்றது. சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலில், அவர் களின் அழைப்பின் பேரில், கலந்து கொண்டபோதே பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறதரன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, எழுவைதீவின் பெருவளமாக உள்ள பனை வளம் அழிக்கப்பட்டுவருவது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும், அதிவேகமாக பரவிவரும் கருவேல மரங்களின் பரவலை கட்டுப்படுத்த வேண்டும். அத்துடன், தொடர்ச்சியாக தாம் எதிர்கொள்ளும் குடிதண்ணீர், போக்குவரத்து உள்ளிட்ட பிரச்னைகள் பற்றியும் மீனவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதார நெருக்கடிகள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நீர் வளம் சார் களப்பயணம் நல்லூரில் நடைபெற்றது!



யாழ்ப்பாணம், மார்ச் 30

நல்லூர் பிரதேச நீர் வளங்கள் சார் களப்பயணம் கடந்த சனிக்கிழமை பேராசிரியர் எஸ். சிறீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த களப்பயணத்தின் போது அரியாலை நீர்நொச்சித் தாழ்வுக் குளம் , பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருடனான தண்ணீர் சார்ந்த உரையாடல், நல்லூர் லிங்கம் கிறீம் ஹவுஸின் தயாரிப்பில் நீரின் பயன்பாடு குறித்தும் , கோண்டாவில் குடிதண்ணீர் விநியோக நிலையம், யாழ். பல்கலைக்கழக கோண்டாவில் மாணவர் விடுதியில் கழிவு நீர் பயன்பாடு போன்றன குறித்தும் ஆய்வுக் களப்பணி இடம்பெற்றது.

இந்தக் கள ஆய்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் செயற்றிட்டம் ஊடாக உருவாகிய வடக்கின் நீர் உரையாடல் மன்றமும் இணைந்து ஒருங்கிணைத்திருந்தது.

இந்த களப்பயணத்தில் நீர் சார்ந்த துறைமையாளர்கள், மாணவர்கள். சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். நல்லூர் பிரதேச செயலக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான விசேட கருத்தாடல் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# வெடியரசன் கோட்டை முன்பாக முன்னணியினர் போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 30

நெடுந்தீவு வெடியரசன் கோட்டை அருகில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று புதன் கிழமை போராட்டத்தில் ஈடுபட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட அந்தக் கட்சியின் உறுப்பினர்கள், ஆதவராளர்கள், பொது மக்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தையடுத்து அப் பகுதியில் பொலிஸாரும் புலனாய்வாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை பௌத்த விகாரையுடன் தொடர்புபடுத்தி கடற்படை அமைத்த பதாகையால் குழப்பம் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் தொல்லியல் திணைக்களம், கடற்படையின் செயல்பாட்டை கண்டித்தும் வெடியரசன் கோட்டை தமிழரின் சொத்து என வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் நடைபெற்றது. (ஐ)

# புதிய ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் அரசியல்வாதிகளுக்கும் பாதுகாப்பு!

## பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலர்

கொழும்பு, மார்ச் 30

மோசடி மற்றும் ஊழலில் ஈடுபட்டதாக அரசியல்வாதிகள் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் நபர்களை கையாள்வதற்கான ஏற்பாடுகளை புதிய ஊழல் தடுப்புச் சட்டத்தில் உள்ளடக்கியுள்ளதாக சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

தமது நாட்டைக் காப்பாற்றிய தேசத் தலைவர்களை பாதுகாக்க இந்தியாவில் வலுவான சட்டங்கள் இருப்பதாகவும், இலங்கையிலும் அத்தகைய சட்டங்கள் தேவைப்படுகின்றன என்று அவர் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

நாட்டைக் காப்பாற்றிய தேசியத் தலைவர்கள் மற்றும் தலைவர்களை எந்த அடிப்படையும் இல்லாமல் திருடர்கள் என்று முத்திரை குத்தப்பட்டு, இந்த நாட்டை அழித்தவர்கள் மற்றும் நாட்டுக்கு ஆக்கப்பூர்வமான எதையும் செய்யாதவர்கள் முன்னிலைப் படுத்தப்படும் நிலை இலங்கையில் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

தேசத் தலைவர்களை திருடர்கள் என முத்திரை குத்துபவர்கள் தோல்வியடைந்தவர்கள், இது வருந்தத்தக்க நிலை, நாட்டின் மோசமான நிலை, இதே நிலை நீடித்தால் முற்போக்குவாதிகள் யாரும் அரசியலுக்கு வரமாட்டார்கள் - என்றார்.

ஏப்ரல் மாதத்திற்குள் புதிய ஊழல் தடுப்பு சட்டம் கொண்டு வரப்பட்டு பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)




# மனித உரிமைகள் மீறல் குறித்து மன்னிப்புச் சபைக்கு விளக்கம்!

கொழும்பு, மார்ச் 30

சர்வதேச மன்னிப்பு சபையின் தெற்காசிய பிராந்திய பிரதிநிதிகளை சந்தித்த தேசிய மக்கள் சக்தியினர், இலங்கையில் பொது மக்கள் மீதான மோசமான மனித உரிமைகள் மீறல்கள் குறித்து விளக்கமளித்துள்ளனர்.

முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், நீதிமன்றத் தீர்ப்புகளை அலட்சியம் செய்தல், போராட்டங்களுக்கு எதிராக தடை செய்யப்பட்ட இரசாயனம் அடங்கிய கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மற்றும் அரசாங்கத்தின் மனித உரிமைகள் மீறல்கள் குறித்து விளக்கமளித்தனர்.

சர்வதேச மன்னிப்பு சபையின் தெற்காசிய பிராந்தியத்தின் பணிப்பாளர் யாமினி மிஷா உள்ளிட்ட குழுவினரை, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க, தேசிய செயல்குழு உறுப்பினர் விஜித ஹேரத் உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் குழுவை நேற்று புதன்கிழமை ஜே. வி. பி. தலைமை அலுவலகத்தில் சந்தித்தனர்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள், இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை குறித்த தமது அமைப்பின் 2022 வருடாந்த அறிக்கைக்கு இந்த விவகாரங்களில் கவனம் செலுத்தியுள்ளனர். (ஐ)

# வாகன இறக்குமதிக்கு கால அவகாசம் அளிப்பு

கொழும்பு, மார்ச் 30

வெளிநாடுகளில் உள்ள இலங்கை பணியாளர்களுக்கு அவர்கள் அனுப்பும் பணத்தின் அடிப்படையில் மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் எதிர்வரும் ஒகஸ்ட் வரை நீட்டிக்கப்படும் என தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நிகழ்வில் கலந்து கொண்டு இதனை தெரிவித்த அமைச்சர் மனுஷ நாணயக்கார, நாட்டுக்கு டொலர்களை கொண்டு வரும் ஏனைய நபர்களுக்கும் மின்சார வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் திட்டத்தையும் வெளிப்படுத்தினார்.

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை பணியாளர்களுக்கு, முன்னதாக, கடந்த 2022 மே முதல் 2022 டிசெம்பர் 31ஆம் திகதி வரை மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடியால் நாடு படுகுழியில் விழுந்த போது, நாட்டின் குறைந்து போன அந்நிய செலாவணி கையிருப்பை அதிகரிக்கும் முயற்சியில், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு சலுகைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# சுகாதார துறை அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவும்

கொழும்பு, மார்ச் 30

ஆசிய அபிவிருத்தி வங்கியால் இலங்கைக்கு தற்போது வழங்கப்படும் உதவிகளுக்கு மேலதிகமாக, அடுத்த சில வருடங்களுக்கு ஆரம்ப சுகாதாரத் துறை மற்றும் ஏனைய சுகாதார துறைகளை அபிவிருத்தி செய்வது குறித்து அவதானம் செலுத் தப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதி தலைவர் ஷிக்சின் சென் மற்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஆகியோரின் சந்திப்பு பிலிப்பைன்ஸ் - மணிலா நகரிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி தலைமையகத்தில் இடம்பெற்றது. இதன்போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத் தப்பட்டது.

நீண்ட கலந்துரையாடலின் பின்னர், இலங்கை பிரதிநிதிகளின் கோரிக்கைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதித் தலைவர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து சாதகமான பதில் கிடைத்ததுடன், இலங்கையின் சுகாதார கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு தங்களால் இயன்ற உயர்மட்ட ஆதரவை வழங்குவதாக அவர்கள் தெரிவித்தனர்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலடன் சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன உள்ளிட்ட குழுவினர் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ஐ)

# போதைப் பொருள் விற்ற பெண் அடங்கலாக 11 பேர் யாழில் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தை அண்மித்த பகுதியில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன், அந்தப் பெண்ணிடம் வாடிக்கையாக போதைப் பொருளை வாங்கும் மாணவன் ஒருவன் உட்பட 10 பேரையும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் 17 முதல் 22 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் தெரிய வருகின்றது.

கைதான பெண் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நீண்டகாலமாக போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளார் என்று யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவின் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான அணியினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமையவே அந்தப் பெண்ணின் இடம் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நிர்மாணத்துறை பிரச்னைகளுக்கு படிப்படியாக தீர்வு வழங்கப்படும்!

## ஜனாதிபதியின் ஆலோசகர்

கொழும்பு, மார்ச் 30

நாட்டின் நிதி நிலைமை சீரானதுடன், நிர்மாணத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு படிப்படியாக தீர்வு வழங்கப்படும் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நிர்மாணத்துறையை மேம்படுத்துவதற்கான வட்டி விகிதங்கள் மற்றும் வங்கி மீட்பு நடவடிக்கைகள் தொடர்பான செயல்குழு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் கூடிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில், நிர்மாணத் துறையினர் எதிர்நோக்கும் நிதிச் சிக்கல்கள் மற்றும் இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

தொடர்ந்தும் நிர்மாணத் துறையில் ஏற்பட்டுள்ள அனைத்துப் பிரச்னைகளுக்கும் தீர்வுகளை வழங்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்று ஜனாதிபதியின ஆலோசகர் இங்கு தெரிவித்தார்.

நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோர் நிதித்துறையின் தற்போதைய நிலைமை குறித்து விளக்கமளித்தனர். (ஐ)

# ரயர்களின் விலை 15 வீதம் குறையும்

கொழும்பு, மார்ச் 30

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வலுவடைந்த நிலையில், ரயர்களின் விலைகள் குறை வடையும் என்று இறக்குமதியாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

5 சதவீதத்தால் விலை குறைக்கப்பட்டுள்ளதாக ரயர் இறக்குமதியாளர்கள்சங்கம் தெரிவித்துள்ளது.

முன்னைய இருப்புகள் இன்னும் சந்தையில் இருப்பதால் விலையை 5 சதவீதம் மட்டுமே குறைக்க முடியும் என்று சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# நிதி அமைச்சருக்கு எதிரான வழக்கு இன்று விசாரணைக்கு

கொழும்பு, மார்ச் 30

நீதிமன்றத்தை அவமதித்ததாக நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்கள் இன்று வியாழக்கிழமை ஐந்து நீதியரசர்கள் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்காக 2023 வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை தக்கவைப்பதற்கு எதிராக, உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை நடைமுறைப் படுத்தாமல் நீதிமன்றத்தை அவமதித்ததாக இந்த மனுக்கள் குற்றம்சாட்டியுள்ளன.

இதன்படி, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹார, பிரியந்த ஜயவர்த்தன, விஜித் மலல்கொட மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வின் முன் விசாரணைக்கு வரவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்காக 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட தொகையை நிறுத்தி வைப்பதைத் தடுத்து நிதியமைச்சின் செயலாளருக்கு உயர் நீதிமன்றம் இம்மாதம் 3ஆம் திகதி இடைக்கால உத்தரவு பிறப்பித்ததாக மனுதாரர்கள் கூறுகின்றனர்.

வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை நிறுத்தி வைப்பதைத் தடுத்து நிதி அமைச்சின் செயலாளருக்கு நீதிமன்றம் மற்றுமோர் இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# போராடிய பெற்றோலியத்துறை ஊழியர்களுக்கு கட்டாய விடுமுறை!

## படையினரின் பாதுகாப்பில் எரிபொருள் விநியோகம் எரிசக்தி அமைச்சர் விஜயசேகர அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 30

**எரிபொருள் விநியோகத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்ட 20 பெற்றோலியத்துறை ஊழியர்கள் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராக எவ்வித பாரபட்சமும் இன்றி அத்தியாவசிய சேவை சட்டத்தின் கீழ் உச்சபட்ச சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.**

தொழில்சங்க செயல்பாட்டாளர்களால் பெற்றோலிய ஊழியர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றமையை கருத்தில்கொண்டு, பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் காஞ்சன விஜயசேகர கூறினார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாகக் குறிப்பிட்டு பெற்றோலிய தொழிற்சங்கத்தினர் கடந்த திங்கட்கிழமை முதல் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கான எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டது. இதனால் எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு அருகில் வாகனங்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்தன.

இந்நிலையிலேயே நேற்று புதன்கிழமை மின்சக்தி அமைச்சில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், 3 வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எரிபொருள் விநியோகத்துக்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெற்றோலிய சேவையில் ஈடுபட்டுள்ள ஒரு சில தொழில்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்து பவர்கள் சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதில் தொழில்சங்க தலைவர்கள் மாத்திரமே கலந்து கொண்டிருந்தனர். 95 சதவீதமான அங்கத்தவர்களின் ஒத்துழைப்பு இவர்களது தொழில்சங்க நடவடிக்கைகளுக்கு கிடைக்கப் பெறவில்லை. சேவையிலிருந்து விலகியவர்களும், ஓய்வு பெற்றவர்களுமே இவ்வாறான அடாவடியான செயல்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபட்ட 20 பெற்றோலிய ஊழியர்கள் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களில் பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழில்சங்க பிரதிநிதியொருவரும் உள்ளடங்குகின்றார்.

எவ்வாறிருப்பினும் இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடும் சகலருக்கு எதிராகவும் எவ்வித பாகுபாடும் பாரபட்சமும் இன்றி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ஐ)

# இறக்குமதி முட்டைகள் வெதுப்பக உற்பத்திகளுக்கு பொருந்தாதவை

## கோழிப் பண்ணை உற்பத்தியாளர் சங்கம்

கொழும்பு, மார்ச் 30

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் உள்நாட்டு வெதுப்பக உற்பத்திகளுக்கு பொருத்தமற்றது என கோழி பண்ணை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகள் 55 கிராம் முதல் 70 கிராம் வரையில் நிறையுடைய அதேவேளை தற்போது இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் 45 கிராம் நிறையுடையனவாகும்.

இவற்றில் தேன் போன்ற வாசனை வீசுகிறது. மேலும் குறித்த முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டு பல நாட்கள் கடந்துள்ள நிலையில் அவற்றுள் 50 வீதமானவை பழுதடைந்துள்ளன.

அரசாங்கம் கோழி பண்ணை உற்பத்திகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குமாயின் வெளிநாடுகளிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்யும் வேண்டிய தேவை ஏற்படாது.

முன்னதாக முட்டை விற்பனை தொடர்பில் கட்டுப்பாட்டு விலை அறிவித்து வர்த்தமானி வெளியிடப்படவில்லை எனின் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகளை 30 முதல் 35 ரூபாய் வரையில் விற்பனை செய்திருக்கலாம் - என்றார். (ஐ)

# இலங்கை - தாய்லாந்து வர்த்தக ஒப்பந்தத்துக்கான பேச்சு நிறைவு

கொழும்பு, மார்ச் 30

அடுத்த வருடம் கைசாத்திட உத்தேசிக்கப்பட்டுள்ள இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்த நான்காம் சுற்று பேச்சு நேற்றுடன் நிறைவடைந்தது.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இந்தப் பேச்சின் நோக்கம் வளர்ந்துவரும் பொருளாதாரத்தை கொண்ட தென்கிழக்காசிய சங்க நாடுகளுடன் பொருளாதார உறவுகளை பலப்படுத்துவதாகும்.

இதற்கமைய, இலங்கையின் ஏற்றுமதி பொருட்கள் தாய்லாந்து சந்தைக்குள் நுழைவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கும். அதுமாத்திரமின்றி, அந்த பொருளாதார சந்தையினூடாக ஏனைய ஆசியான் நாடுகளின் பொருளாதார சந்தைகளுக்கான பிரவேசத்தை அதிகரிக்கும்.

மேலும், சுங்க வரி அல்லாத தடைகளை குறைத்துகொள்வதே இலங்கை தரப்பு பேச்சு நோக்கமாகும்.

இந்தப் பேச்சின்போது தாய்லாந்து குழுவினரால் கங்கராமை விகாரைக்கு 500 அன்னதானப் பாத்திரங்கள் நன்கொடையளிக்கப்பட்டன. (ஐ)

# முன்னாள் சபாநாயகருக்கு இன்று பாராளுமன்றில் அஞ்சலி

கொழும்பு, மார்ச் 30

முன்னாள் சபாநாயகர் மறைந்த ஜோசப் மைக்கல் பெரேராவின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் பாராளுமன்ற வளாகத்துக்கு கொண்டு வரப்பட்டு இறுதி அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை பாராளுமன்றம் முன்பாக உள்ள விசேட சம்பிரதாய மண்டபத்தில் அவரின் உடல் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

ஜோசப் மைக்கல் பெரேரா பாராளுமன்றத்தின் 17ஆவது சபாநாயகராவார். 2001 முதல் 2004 வரை சபாநாயகராக பணியாற்றினார்.

பல அரசாங்கங்களில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் மற்றும் தொழிலாளர் உட்பட அமைச்சரவை அமைச்சர் பதவிகளை வகித்த அவர், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராகவும் சிறிது காலம் பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மிஹின் லங்கா வழக்கு; சஜின் வாஸ் விடுதலை!

கொழும்பு, மார்ச் 30

மிஹின் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றியபோது அரசாங்கத்துக்கு 88. 3 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுத்தினார் என்று குற்றம் சுமத்தப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவை விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த வழக்கை தொடர முடியாது என சஜின் வாஸ் குணவர்த்தன சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் முன்வைத்த பூர்வாங்க ஆட்சேபனையை ஏற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நீதிவானை திட்டிய பெண்களுக்கு பிணை

மட்டக்களப்பு, மார்ச் 30

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற மேலதிக நீதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரை அச்சுறுத்தி பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து அத்துமீறு உள் நுழைந்து, மேலதிக நீதவானைத் தகாத வார்த்தைகளினால் திட்டிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இரு பெண்களையும் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம். ஹம்ஸா பிணையில் விடுதலை செய்துள்ளார்.

குறித்த பெண்ணின் கணவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மனைவி வேறொரு பெண்ணுடன் மேலதிக நீதவானின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு சென்று தகராறில் ஈடுபட்டார். இந்நிலையில் குறித்த இரு பெண்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். (அ)

# வட்ஸ்அப் மூலம் நட்பானவரால் சிறுமி பாலியல் வன்புணர்வு!

கண்டி, மார்ச் 30

வட்ஸ் அப் மூலம் பழக்கமான நண்பரால் 15 வயது சிறுமி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றார்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

கண்டியை சேர்ந்த 15 வயது சிறுமி ஒருவருடன் அம்பலாந்தோட்டையை சேர்ந்த ஒருவருக்கும் வட்ஸ் அப் மூலம் காதல் தொடர்பு ஏற்பட்டுள்ளது. சிறிது காலம் மேற்படி வட்ஸ் அப் காதல் நீடித்துள்ளது.

அண்மையில், அந்த சிறுமியை நேரடியாக சந்திக்க வந்த அம்பலாந்தோட்டை நபர் சிறுமியை ஏமாற்றி கண்டி கெட்டம்பே பகுதியில் உள்ள ஓர் உல்லாச விடுதிக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு சிறுமியைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். இதன் பின்னர் அவர் தலைமறைவாகி விட்டார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட சிறுமி கண்டி பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து சந்தேக நபர் தேடப்பட்டு வருகிறார். பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக கண்டி தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# அ.தி.மு.க. பொதுக் குழு தீர்மானங்களை எதிர்த்த பன்னீர்செல்வம் மனுக்கள் தள்ளுபடி

அ.தி.மு.க. பொதுக் குழு தீர்மானங்களையும் பொதுச் செயலாளர் தேர்தலை யும் எதிர்த்துத் தொடரப்பட்ட ஏழு மனுக்களும் தள்ளுபடி செய்யப்படுவதாக சென்னை உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து ஓ. பன்னீர் செல்வம் தரப்பு உடனடியாக மேல் முறையீடு செய்திருக்கிறது

கடந்த ஆண்டு ஜூலை 11ஆம் தேதி நடந்த அ.தி.மு.க. பொதுக் குழுக் கூட்டங்கள் செல்லாது என அறிவிக்கக்கோரி, ஓ. பன்னீர்செல்வம் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனுக்கள் அத்தனையையும் சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

அ.தி.மு.கவின் பொதுச் செயலாளரைத் தேர்வுசெய்வதற்காந தேர்தல் மார்ச் 26ஆம் தேதி நடைபெறுமென மார்ச் 17ஆம் தேதியன்று எடப்பாடி கே. பழனிச்சாமி தரப்பு அறிவித்தது. இதற்கான வேட்புமனு தாக்கல் மார்ச் 18ஆம் தேதி துவங்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் தேர்தலுக்கு தடைவிதிக்கக் கோரியும் பொதுக்குழு தீர்மானங்களுக்கு எதிராகவும் ஓ. பன்னீர்செல்வம் தரப்பினர் சென்னை உயர்நீதிமன்றத்தில் இடைக்கால மனுக்களைத் தாக்கல்செய்தனர்.



இந்த வழக்கை நீதிபதி குமரேஷ்பாபு தலைமையிலான அமர்வு விசாரித்தது. ஓ.பன்னீர்செல்வம், அவரது ஆதரவாளர்களான பி. வைத்திலிங்கம், மனோஜ் பாண்டியன், ஜே.சி.டி. பிரபாகர் உள்ளிட்டோர் சார்பாக மொத்தம் ஏழு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களை விசாரித்த நீதிமன்றம், பொதுச் செயலாளர் தேர்தலை நடத்தலாம் எனவும் முடிவுகளை அறிவிக்கக்கூடாது என்றும் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த வழக்கில் மார்ச் 22ஆம் தேதி வாத - பிரதிவாதங்கள் முடிவடைந்தன. இதற்குப் பிறகு இரு தரப்பும் எழுத்து மூலமாக தங்கள் வாதங்களைத் தாக்கல்செய்தன. இதற்குப் பிறகு, நீதிமன்றம் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தது.

இந்த வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது. பொதுக் குழு தீர்மானங்களை எதிர்த்தும் பொதுச்செயலாளர் தேர்தலுக்கு தடைகோரியும் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து மனுக்களையும் தள்ளுபடி செய்வதாக நீதிபதி தீர்ப்பளித்தார்.

இதனால், எடப்பாடி கே. பழனிச்சாமி தரப்பு அறிவித்த பொதுச் செயலாளர் தேர்தலின் முடிவை அறிவிக்க விதிக்கப்பட்டிருந்த தடை நீங்கியது.

மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதும் இந்த தீர்ப்பை எதிர்த்து ஓ. பன்னீர் செல்வம் தரப்பின் சார்பில், மேல் முறையீடு செய்வதாகவும் அதனை உடனடியாக விசாரிக்க வேண்டுமென்றும் அவரது தரப்பு மூத்த வழக்கறிஞர் சி. மணி சங்கரும் அப்துல் சலீமும் கோரினர். இதையடுத்து இந்த மேல் முறையீட்டை நீதிபதிகள் ஆர். மகாதேவன், முகமது ஷஃபீக் அடங்கிய அமர்வு விசாரிக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் யார் என்பது குறித்து வி.கே. சசிகலா, ஓ. பன்னீர்செல்வம் ஆகியோர் தொடர்ந்த பிரதானமான உரிமையியல் வழக்குகள் இன்னும் நிலுவையில் உள்ளன. ●

# தமிழகத்தில் 1,000 ரூபா பெறப் போகும் 1 கோடி பெண்கள்! ஸ்டாலின் அதிரடி!!.




தமிழக அரசு அறிவித்துள்ள, மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையை, தமிழகத்தில் ஒரு கோடி பெண்கள் பெறவுள்ளனர். பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கு மட்டுமே இந்த தொகை கிடைக்கும் என, சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.

சட்டசபை தேர்தலின்போது, தி.மு.க., சார்பில் 500க்கும் மேற்பட்ட வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. அவற்றில், குடும்பத் தலைவியருக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் உரிமைத் தொகை வழங்கப்படும் அரசு பஸ்களில் இலவச பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும் என்பது உள்ளிட்ட அறிவிப்புகள், பெரும் வரவேற்பை பெற்றன.

**உரிமைத்தொகை**

மகளிர் அதிகமுள்ள தொகுதிகளில் தி.மு.க., வெற்றி பெற, இந்த அறிவிப்புகளும் காரணமாக அமைந்தன. தி.மு.க., ஆட்சிக்கு வந்ததும், மகளிருக்கான இலவச பஸ் பயணத் திட்டம் அமலுக்கு வந்தது.

ஆட்சி பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் ஆகவுள்ள நிலையில், மகளிர் உரிமைத் தொகை திட்டம் அமல்படுத்தப்படவில்லை என, எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்து வந்தன.

சமீபத்தில் நடந்த ஈரோடு கிழக்கு தொகுதி சட்டசபை இடைத்தேர்தலிலும், இந்த பிரச்னை எதிரொலித்தது. அப்போது, ‘பட்ஜெட்டில் அறிவிக்கப்படும்’ என, முதல்வர் ஸ்டாலின் உறுதி அளித்தார்.

அதன்படி, சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில், ‘மகளிருக்கான உரிமைத் தொகை தகுதியுள்ளவர்களுக்கு வழங்கப்படும். இத்திட்டம், செப்ரம்பர் மாதம் நடைமுறைக்கு வரும்’ என, அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, உரிமைத் தொகை பெற தகுதியுள்ளவர்கள் யார் என்ற விவாதம் எழுந்தது. தகுதி என்ற வரையறையை புகுத்தினால், இரண்டு கோடி பெண்களில், 80 லட்சம் பேருக்கு மட்டுமே மாதம் 1,000 ரூபாய் கிடைக்கும் என்ற நிலை உருவானது. இதற்கு எதிராக, பல தரப்பிலும் குரல்கள் எழுந்தன.

இந்நிலையில், ஒரு கோடி பேருக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என, சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். உரிமைத் தொகை பெறுவதற்கு தகுதியுடையவர்கள் யார் என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார்.

**சட்டசபையில் அவர் கூறியதாவது:**

பட்ஜெட்டில், மகளிர் உரிமைத் தொகை திட்டம் குறித்த அறிவிப்பு வெளியாகி, பொருளாதார வல்லுனர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த திட்டம் செயல்படுத்தும் விதம் குறித்தும், அதில் பயன் பெறப் போகும் குடும்பத் தலைவியரின் தேர்வு குறித்தும் விளக்கத்தை அளிக்க வேண்டியுள்ளது.

கிராம பொருளாதாரத்தை சுமக்கும் முதுகெலும்பாக, இன்றும் பெண்கள் இருக்கின்றனர். சமூகத்தில் வெற்றி பெறக் கூடிய ஒவ்வொரு ஆணுக்கு பின்னால் ஒரு பெண் இருப்பார் என்று கூறுவதுண்டு.

ஆணின் வெற்றிக்காகவும், குழந்தைகளின் கல்வி, உடல் நலம் காக்கவும் வீட்டிலும், வெளியிலும் ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் பெண்கள் உழைத்து இருப்பர்!

**முன்னுரிமை**

அதற்கெல்லாம் ஊதியம் கணக்கிட்டால், குடும்ப சொத்துக்கள் அனைத்திலும் சமமாக பெண்கள் பெயரும், சட்டம் இயற்றாமல் இடம் பெற்று இருக்கும். இப்படி கணக்கில் கொள்ளப்படாத பெண்களின் உழைப்பை முறையாக அங்கீகரிப்பதற்கு தான், மகளிர் உரிமைத் தொகை திட்டம்.

இந்த திட்டத்திற்கு மகளிருக்கான உதவித் தொகை என்று இல்லாமல், உரிமைத் தொகை என கவனத்துடன் பெயரிடப்பட்டு உள்ளது. உலகில் பல நாடுகளில் சோதனை முறையில் ‘யுனிவர்சல் பேஸிக் இன்கம்’ என்ற பெயரில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

பரிசோதனை அடிப்படையில் செயல்படுத்திய திட்டத்தின் வாயிலாக, பல குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதாக பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த திட்டத்தால், வறுமை பாதியாகக் குறைவதற்கு வாய்ப்பு உண்டு.

‘கிடைக்கும் நிதியை தங்கள் குழந்தைகளின் கல்விக்கும், ஊட்டச்சத்து, மருத்துவச் செலவிற்கும் பயன்படுத்த, மகளிர் முன்னுரிமை தருகின்றனர். சிறு சிறு தொழில்களை செய்ய முன்வருகின்றனர்’ எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பரிசோதனை முயற்சியாக நடைமுறைப்படுத்திய திட்டத்திற்கே, இவ்வளவு பயன்கள் கிடைக்கிறது என்றால், தமிழகத்தில் செயல்படுத்த இருக்கும் இந்த மாபெரும் முயற்சி, எதிர்காலத்தில் தமிழ் சமூகத்தில் உருவாக்கப் போகும் பயன்களை எண்ணி பார்க்க வேண்டும்.

இந்த திட்டத்திற்கு பட்ஜெட்டில், 7,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் எவ்வளவு பேர் பயன் பெறுவர் என்று, பலர் மனக்கணக்கு போட்டு வருகின்றனர். தேவையானவர்களுக்கு, தேவையான உதவியை உரிய நேரத்தில் தேடித் தேடி வழங்குவது தான் நலத் திட்டங்களின் நோக்கம்.

நடைபாதையில் வியாபாரம் செய்பவர்கள், அதிகாலையில் கடற்கரை நோக்கி செல்லும் மீனவ மகளிர், கட்டுமான தொழில் பணிபுரிபவர்கள், சிறிய கடைகள், வணிகம் செய்பவர்கள், சிறு தொழில் நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரிபவர்கள்.

ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியக் கூடியவர்கள் என, தங்கள் விலை மதிப்பில்லாத உழைப்பை தொடர்ந்து வழங்கி வரும் பெண்கள், இத்திட்டத்தால் பயன் பெறுவர்.

தமிழகத்தில் மாபெரும் முன்னெடுப்பாக, வரலாற்றில் இடம் பெறக்கூடிய இந்த திட்டம், ஒரு கோடி குடும்பத் தலைவியருக்கு வழங்கும் வகையில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியிடப்படும். இவ்வாறு முதல்வர் கூறினார். ●

## பிரதமருக்கு எதிராக வீதிகளில் திரளும் மக்கள்

# வரலாறு காணாத நெருக்கடியில் இஸ்ரேல் சிக்க என்ன காரணம்?



வரலாறு காணாத வகையில் மிகப் பெரும் உள்நாட்டு நெருக்கடிகளின் பிடியில் தற்போது சிக்கித் தவித்து வருகிறது இஸ்ரேல்.

தன் நாட்டின் நீதி அமைப்புகள் செயல்படும் திட்ட வடிவமைப்புகளில் இஸ்ரேல் அரசாங்கம் மேற்கொண்ட சில மாற்றங்களே, நாட்டில் இத்தகைய சலசலப்புகள் அதிகரிப்பதற்குக் காரணமாய் அமைந்தன.

இஸ்ரேலில் என்னதான் நடக்கிறது, வரலாறு காணாத உள்நாட்டு நெருக்கடி நிலவ என்ன காரணம் என்பதைத் தெரிந்து கொள்ள இந்தக் கட்டுரை உங்களுக்கு உதவலாம்.

**இஸ்ரேலில் என்ன நடக்கிறது?**

இந்த ஆண்டு தொடக்கத்திலிருந்தே, அடுத்தடுத்த வாரங்களில் அரசாங்கத்தின் மறுசீரமைப்பு மசோதாவை எதிர்த்து மக்களால் போராட்டம் நடத்தப்பட்டு வந்தது.

இஸ்ரேலின் முக்கியப் பகுதியான டெல் அவிவ் தெருக்களில், நூற்றுக்கணக்கான மக்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தபோது, பிரச்னை பூதாகரமானது. வணிகரீதியாக இது இஸ்ரேலின் முக்கியப் பகுதியாகக் கருதப்படுகிறது. பிற நகரங்களும் மற்ற சிறுநகரப் பகுதிகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படுவதற்கும் இதுவே மையப்புள்ளியாக இருந்து செயல்படுகிறது.

அரசாங்கத்தின் இந்த மறுசீரமைப்பு மசோதா அகற்றப்பட வேண்டுமெனவும் நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பதவி விலக வேண்டுமெனவும் அவர்கள் முழக்கமிட்டு வருகின்றனர்.

பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அரசியல் மறுசீரமைப்பு மசோதாக்கள், மக்களிடையே மிகப் பெரும் எதிர்ப்புகளைச் சந்தித்து வரும் சூழலில், அவரது அரசியல் எதிரிகளும் இதை ஆயுதமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

இது அனைத்தையும்விட, மிகப் பெரும் எண்ணிக்கையில் வளர்ந்து வரும் இஸ்ரேலின் ராணுவம் அந்நாட்டின் பெரும் பலமாகவும் முதுகெலும்பாகவும் கருதப்படுகிறது. இந்த நிலையில், இஸ்ரேல் ராணுவத்தினரும் பணியில் சேர மறுத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது அந்நாட்டின் பாதுகாப்பிற்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

**மக்களின் எதிர்ப்பிற்கு காரணம் என்ன?**

நெதன்யாகுவின் இந்த மறுசீரமைப்பு மசோதா நாட்டின் ஜனநாயகத்தை பாதிக்கிறது என அவரது எதிர்ப்பாளர்கள் கூறுகின்றனர்.

“அவரது இந்த மறுசீரமைப்பு மசோதாக்கள், நீதித்துறையை நலிவடையச் செய்கிறது. வரலாற்றுரீதியாகப் பார்க்கும்போது, அரசாங்கம் தனது அதிகாரத்தை அதிகரிக்கச் செய்யும் வகையில் செயல்பட்டு வருவதாகவே நாம் இதைப் பார்க்க வேண்டும்,” என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதன் காரணமாகவே மக்கள் கடுமையான எதிர்ப்புகளை தற்போது பதிவு செய்து வருகின்றனர். இஸ்ரேலில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களுக்கு எதிராக இதுவரை நடத்தப்பட்ட எதிர்ப்புகளிலேயே, தற்போது நிகழ்ந்து வரும் போராட்டங்கள் தான் கடுமையானதாகப் பார்க்கப்படுகிறது. பிரதமர் நெதன்யாகுவும் தன்னுடைய அரசியல் வாழ்வில் இதுவரை சந்தித்திராத மோசமான எதிர்வினைகளை எதிர்கொண்டு வருகிறார்.

‘தற்போது அவர் சீரமைத்திருக்கும் மசோதாக்கள், அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து தன்னைத் தானே அவர் காத்துக்கொள்வதற்கு உதவியாக இருக்கும். அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் ஊழல் குற்றச்சாட்டுகளை நெதன்யாகு மறுத்து வரும் நிலையில், இஸ்ரேலில் சில குறிப்பிட்ட மறுசீரமைப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன,” என்று அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

**மறுசீரமைக்கப்பட்ட மசோதாக்கள் என்னென்ன?**

மறுசீரமைக்கப்பட்ட மசோதாக்கள் நிலுவையில் இருப்பதாக அரசாங்கம் தரப்பில் கூறப்பட்டு வந்தாலும், உண்மையில் இந்த மறுசீரமைப்புத் திட்டங்கள் புழக்கத்திற்கு வரும் எல்லைகளைத் தொட்டுவிட்டதாகவே கூறப்படுகிறது.

குறிப்பாக இஸ்ரேல் அரசாங்கத்தின் அதிகாரங்களை அந்நாட்டின் நீதித்துறையின் அதிகாரங்களுக்கு நிகராக மாற்றியமைக்கும் முயற்சியில் அந்நாட்டு அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது.

அரசாங்கத்தின் தற்போதைய திட்ட வடிவங்களின் படி: உச்சநீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவுகளை மறுபரிசீலனை செய்வதற்கோ அல்லது அதை நீக்குவதற்கோ, அரசாங்கம் நெசட்டில் (பாராளுமன்றத்தில்) வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் அதை எளிதாகச் சாத்தியப்படுத்த முடிகிறது.

யார் நீதிபதிகளாக உருவாக வேண்டும் என்பதை முடிவெடுக்கும் குழுவில், அரசு தன்னுடைய பிரதிநிதிகளை அதிகப்படுத்துகிறது. இதன் மூலம் உச்சநீதிமன்ற நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் கூட மறைமுகமாக அரசாங்கத்தின் கைகளுக்கு செல்கிறது.

அட்டர்னி ஜெனரலின் (அரசு தலைமை வழக்கறிஞர்) கீழ் செயல்பட்டு வரும், சட்ட ஆலோசகர்கள் வழங்கும் ஆலோசனையை அமைச்சர்கள் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் விதிகளின்படி அவர்கள் சட்ட ஆலோசகர்களின் ஆலோசனையைக் கேட்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கெனவே இதில் ஒரு மறுசீரமைப்பு மசோதா, சட்டமாக அமலுக்கு வந்துவிட்டது. பிரதமரையே தகுதி நீக்கம் செய்யும் அதிகாரமுடைய அட்டர்னி ஜெனரலின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு விட்டன.

**தன்நிலையிலிருந்து அரசாங்கம் பின்வாங்குமா?**

நாட்டில் நடந்து வரும் போராட்டங்களுக்கு நெதன்யாகு தன்னுடைய எதிர்ப்புகளைப் பதிவு செய்து வருகிறார். போராட்டங்களை வழிநடத்தி வரும் போராட்டக்குழு தலைவர்களை, ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு சதி செய்து வரும் சதிகாரர்களாகச் சித்தரித்து குற்றம் சுமத்தி வருகிறார்.

அதேநேரம் ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் மறுசீரமைப்புத் திட்டங்களில் மாற்றம் செய்வதற்கு, அரசாங்கத்தின் சார்பில் முன்மொழியப்பட்ட விவகாரங்களை எதிர்கட்சிகள் நிராகரித்துள்ளன.

பேச்சுவார்த்தைக்குள் நுழைவதற்கு முன்பாகவே இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என அவர்கள் கூறி வருகின்றனர். முன்னதாக சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்திருந்த குடியரசுத் தலைவரின் அழைப்பை அரசாங்கம் நிராகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

நீதித்துறை சீர்திருத்தங்களை வாக்குறுதிகளின் அடிப்படையில் வாக்காளர்களே தேர்ந்தெடுத்ததாகவும், தற்போது அவர்களே இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருவது ஜனநாயகத்திற்கு விரோதமானது எனவும் இஸ்ரேல் அரசாங்கம் கூறி வருகிறது.

அதேபோல் நீதித்துறை இதுவரை மிகவும் தாராளமான அளவிற்கு சுதந்திரமாகச் செயல்பட்டு வந்தது எனவும், பிரதிநிதிகளின் முக்கியத்துவம் இல்லாமல் நீதிபதிகள் நியமிக்கப்பட்டு வந்தனர் எனவும் அரசாங்கம் வாதிடுகிறது.

இத்தகைய நிலையில், இஸ்ரேல் அரசாங்கத்தின் மீதான அழுத்தம் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. குறிப்பாக நெதன்யாகுவின் சொந்த பாதுகாப்புத்துறை அமைச்சரே, தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் மறுசீரமைப்பு மசோதாக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார் என்பது கவனிக்கத்தக்கது.

இதுபோன்ற செயல்கள், இஸ்ரேலின் குடியரசு தலைவர் அவரைத் தகுதி நீக்கம் செய்வதற்கான முடிவை எடுப்பதற்குத் தூண்டுதலாக அமைந்து வருவதாகக் கூறப்படுகிறது. ●



# சவாலை அனைவரும் ஏற்றுக்கொள்க

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, மார்ச் 30

நாட்டின் மாணவர்கள் 2048 ஆம் ஆண்டளவில் நாட்டைப் பொறுப்பேற்கும் வகையில் நவீன தொழில்நுட்பத்தின் அனைத்து அம்சங்களிலும் அறிவை பெற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்றும், தொழில்நுட்பத்தின் நவீன முன்னேற்றங்களை மேம்படுத்துவதன் மூலம் எதிர்காலத்துக்கு தயாராக வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஆனந்தா கல்கல்லூரியின் 135 ஆவது வருடாந்த பரிசளிப்பு விழாவில் நேற்று பங்கேற்றபோது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பசுமை ஐதரசன் என்பது எதிர்கால கப் பல்களை இயக்கும் முக் கிய வலுசக்தி . எம்மிடம் பச்சை எமோனியா உள்ளது. அதற்காக திருகோணமலையை பிரதான துறைமுகமாக மாற்ற வேண்டும். இவற்றின் ஊடாக , வலுசக்தியை மிகுதியான



சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் நான்கு வருடங்களில் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திய பின்னர், அதே பழைய முறையைப் பின்பற்றுவதா அல்லது புதிய முறையின் ஊடாக முன்னேறி வரும் உலகத்துடன் முன்னோக்கிச் செல்வதா என்பதை தீர்மானிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

கொழும்பு ஆனந்தா நாடாக மாறும்.

அதிலிருந்து நாம் காபன் கிரடிட்டை பெறலாம். ஏனைய நாடுகள் எங்களிடம் இருந்து கார்பன் கிரெடிட்களை வாங்கும். இயற்கையை வளர்க்கும் போது அதற்காக எமக்குப் பணம் கிடைக்கும். அந்தப் பணத்தைக் கொண்டு நம் கடனைக் குறைக்கலாம். நம் கையில் பாரிய சக்தி இருக்கிறது. அவற்றை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக, சுற்றுலாத் துறையை மேம்படுத்த வேண்டும். இன்று, மாலைதீவு சுற்றுலாத்துறையில் முன்னணியில் உள்ளது. நாடு முழுவதும் கடற்கரைகள் உள்ளன. மலை நாடு, எங்களுக்கெனத் தனித்துவமான கலாச்சாரம் உள்ளது.

பௌத்த மற்றும் இந்து மத ஸ்தலங்கள் உள்ளன. அவற்றை நாங்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அண்டை நாடான இந்தியாவில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் உள்ளனர். அதில் குறைந்தபட்சம் ஒரு மில்லியன் பேரை கொண்டுவந்தாலும் போதும். வேறு எதுவும் தேவையில்லை. இந்தியா இன்று வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்தியா முன்னேருவதற்கு சில மூலப் பொருட்கள் இல்லை. உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும். அவர்களின் துறைமுகத்தில் போதிய இடவசதி இல்லை. எனவே கொழும்பை பாரிய துறைமுகமாக மாற்ற வேண்டும். புதிய தெற்கு துறைமுகத்தைப் போன்றே வடக்கு துறைமுகமும் உருவாக்கப்பட்டது.

கடல்சார் பொருளாதாரத்தை நாம் உருவாக்க முடியும். இதுவரை எந்த ஒரு நாடும் இதனை செய்யவில்லை. எங்களுக்கு புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தலாம். நம்மிடம் தகவல் தொழில் நுட்பம் இருக்கிறது. இதில் முக்கிய அங்கம் செயற்கை நுண்ணறிவை பெறுவது. குறிப்பாக நம்மிடம் உள்ள பிரிவு அது. எதிர்காலத்தில், நாங்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்கு செல்ல வேண்டும். மற்ற நாடுகளை விட முன்னேறும் நாடாக மாற்ற வேண்டும். அத்தகைய நாட்டைக் கட்டியெழுப்ப புதிய தலைவர்கள் தேவை. எங்களால் வழிகாட்ட மட்டுமே முடியும்.

யார் தலைமை ஏற்க வேண்டும்? இளைஞர்களாகிய நீங்கள் தான் தலைமைத்துவத்தை பெற வேண்டும். 77 ஆம் ஆண்டில் ஜே. ஆர். கூட அது உங்கள் எதிர்காலம் என்று தான் கூறினார். அதனால் நல்லது கெட்டது இரண்டும் வளர்க்கப்பட்டது. இப்போது எனக்கும் உங்கள் எதிர்காலம் என்று தான் சொல்ல வேண்டும். அந்த சவாலை ஏற்க முடியுமா? நமது எண்ணங்களின்படி சமுதாயத்தை மாற்றுவது பயனற்றது. இளைஞர்கள் புதிய தொழில் நுட்பத்துடன் உள்ளனர்.

அந்த சமூகத்திற்கு செல்லுங்கள். எல்லாவற்றினதும் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளுங்கள். இந்தப் பாடசாலையிலுள்ள திறமையானவரகள் முன்னேறிச் செல்வார்கள். சவால்களை இருந்தால் அதனை ஏற்க பயப்பட வேண்டாம். சவால்களை ஏற்றுக்கொண்டால் தோற்றுவிடுவோம் என்று நினைத்தால் ஒன்றும் செய்ய முடியாது. சவால்களை யோசிக்காமல் ஏற்றுக்கொண்டால் முன்னேறிச் செல்ல முடி யும்.

19 ஆம் நூற்றாண்டில் நவீன இலங்கையை உருவாக்க ஆனந்தா முன்னோடியாக செயற்பட்டது. எனவே 20 ஆம் நூற்றாண்டில் முன்னோடியாக செயற்படுங்கள். இந்த மாற்றங்களை ஒரு வருடத்தில் செய்ய முடியாது. பத்து, பதினைந்து, இருபது வருடங்கள் ஆகலாம். இது உங்களுக்கு ஒரு பிரச்சினையாக இருக்காது. இன்னும் 25 ஆண்டுகளில் உங்கள் வயது எவ்வளவு? இங்குள்ள யாரும் 50 வயதுக்கு மேல் வயதாகியிருக்க மாட்டீர்கள். 45 முதல் 55 வயது வரை இருக்கும். எனவே உங்கள் எதிர்காலத்தை நீங்களே உருவாக்கிக் கொள்ளுங்கள்.

குடியரசு உருவாக்கப்பட்டு நூறு ஆண்டுகள் கடக்கும் முன்பே சீனா வளர்ந்த நாடாக மாற்றப்படும் என்று கூறப்பட்டது. குறிப்பாக அந்த ஆண்டுக்கு 2048 என்று பெயரிட்டோம். நூற்றாண்டு விழாவுக்கு முன் நவீன இந்தியா உருவாகும் என்றும் பிரதமர் மோடி கூறினார். அதாவது 2047ஆம் ஆண்டில். ஏன் நம்மால் முடியாது? அந்த சவாலை நீங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்களும் நாமும் அதனை செய்யலாம்" என்றார். (ஐ)






# பிரபல சமூக செயல்பாட்டாளர் பரமசிங்கம் கோரவிபத்தில் பலி!

அம்பாறை, மார்ச் 30

**அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பின் தலைவரும், பிரபல சமூக செயற்பாட்டாளருமான வடிவேல் பரமசிங்கம் (வயது 46) நேற்று முன் தினம் நள்ளிரவு இடம் பெற்ற கோர விபத்தில் பரிதாபகரமாக பலியானார். அக்கரைப்பற்றில் இருந்து கொழும்பு நோக்கி சுவாட் வானைச் செலுத்திக் கொண்டு சென்றவேளையில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.**



பொலநறுவை வெலிக்கந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செவணப்பிட்டிய பகுதியில் நேற்று முன் தினம் நள்ளிரவு 12.40 மணி யளவில் எதிராக வந்த மரக்கறி லாறியுடன் மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

தம்பிலுவிலைப் பிறப்பிடமாகவும் திருக்கோவில் பிரதேச தம்பட்டையை வதிவிடமாகவும் கொண்ட வடிவேல் பரமசிங்கம் அக்கரைப்பற்று சுவாட் நிறுவனத்தில் நிர்வாக தலைவராகவும் சிவில் சமூகக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப் பதிகாரியாகவும் இருந்து பல அளப்பரிய தொண்டாற்றியவராவார்.

விபத்தில் ஒரு பிள்ளையின் தந்தையான பரமசிங்கம் ஸ்தலத்தில் உயிரிழந்தார். அருகில் இருந்த சாரதி படுகாயத்துக்குள்ளாகி பொலனறுவை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். பின் ஆசனத்தில் இருந்த சுவாட் அமைப்பின் தலைமை உத்தியோகத்தர் கே. பிரேமலதன் காயங்களுக்கு உள்ளாகி அவரும் பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வெலிகந்தை போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)



அன்னமலை சிறி சக்தி வித்தியாலயத்தில் இவ்வருடத்துக்கான முதலாம் ஆண்டு மாணவர்களை இணைக்கும் வித்தியாரம்பவிழா அதிபர் பொன்.பாரதிதாசன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (அ)

# கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மாரின் போஷணை மட்டத்தை உயர்த்த உதவி



அம்பாறை, மார்ச் 30

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மாரின் போஷணை மட்டத்தை உயர்த்தி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும் நோக்கில் அரசாக்கத்தினால் சமுர்த்தி வங்கிகள் ஊடாக ரூபா 10,000 ரூபா வீதம் நிதி வழங்கும் நிகழ்வு தேசிய ரீதியில் இடம் பெற்று வருகின்றது.

இத்திட்டத்திற்கமைய இறக்காமம் பிரதே செயலகத்திற்குட்பட்ட 382 கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு 10,000 ரூபா கொடுப்பனவுகள் இறக்காமம் சமுர்த்தி வங்கியில் வழங்கப்பட்டன.

சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் ரீ.கே.றஹ்மத்துல்லா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஸ்ஸான் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்ததுடன் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.சி.எம்.தஸ்லீம், கருத்திட்ட முகாமையாளர் திருமதி பிரியந்தி, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.முகம்மட் இம்தாத் உள்ளிட்ட அதிதிகள் கலந்து பயனாளிகளுக்கான பணத்தை வழங்கினர். (அ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் ஆசிரியர்கள் பற்றாக்குறைக்கு தீர்வு



மட்டக்களப்பு, மார்ச் 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களில் நிலவும் ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும், கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவ.சந்திரகாந்தன் தலைமையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மாவட்டத்தில் உள்ள வலயக்கல்வி அலுவலகங்களின் வலயக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக்கல்வி அலுவலகங்களின் திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் பிரத்தியேக செயலாளர் த.தஜிவரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு குறித்த விடயம் தொடர்பாக தமது கருத்துக்களையும், பிரச்னைகளையும் முன் வைத்தனர்.

இதன்போது மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பாதகமாக காணப்படும் கணித, விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், கல்வித்துறை சார் திணைக்கள அதிகாரிகளிடம் விடயம் தொடர்பாக கேட்டறிந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் கல்வி அமைச்சின் ஊடாக இந்த பிரச்னைக்கான தீர்வினை மிக விரைவாக பெற்றுத்தருவதாகவும் தெரிவித்தார். (அ)

# நிந்தவூர் பிரதேச சபைக்கு நிறைவேற்று அதிகாரி!

நிந்தவூர், மார்ச் 30

உள்ளூராட்சிச் சபைகளின் நீடிக்கப்பட்ட பதவிக்காலம் நிறைவு பெற்று சபைகள் கலைந்ததையடுத்து, தற்போது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கீழ் சபைகளின் நிர்வாகம் கொண்டு வரப்பட்டுள்ளது.

குறிப்பாக உள்ளூராட்சிச் சபைகளின் ஆணையாளர்கள், மற்றும் செயலாளர்களின் நிர்வாகப் பொறுப்பில் சபைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதன்படி அம்பாறை மாவட்டத்திலும், கிழக்கிலும் முதன்மை நிலையிலுள்ள உள்ளூராட்சி சபையான நிந்தவூர் பிரதேச சபைக்கு, சபையின் செயலாளராகக் கடமையாற்றிவரும் திருமதி.ரி.பரமேஸ்வரன் பொறுப்பு வாய்ந்த நிறைவேற்று அதிகாரியாக தெரிவு செய்யப்பட்டு தமது கடமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளார்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் பிறந்த மண்ணானகாரை தீவைச் சேர்ந்த திருமதி.ரி.பரமேஸ்வரன் கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நிந்தவூர் பிரதேச சபையின் செயலாளராக கடமையேற்றதுடன்,

நிந்தவூர்ப் பிரதேச மக்களின் நல்லபிமானத்தையும், வரவேற்பையும் பெற்ற ஒருவராகத் திகழ்வதுடன், சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மட்டுமன்றி, ஏற்கனவே சபையிலிருந்த மக்கள் பிரதிநிதிகளான உறுப்பினர்களின் நல்லபிமானத்தை வென்ற ஒருவராகவும் திகழ்ந்து வருகின்றார்.. (அ-06)

# கல்முனை உணவகங்களில் நேற்று திடீர் பரிசோதனை

## பாவனைக்கு உதவாத உணவுகள் அழிப்பு





அம்பாறை, மார்ச் 30

உணவுப்பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம். அஸ்மி தலைமையில் கல்முனை பிரதேசத்தில் உணவு தயாரிக்கும், விற்பனை செய்யும், விநியோகம் செய்யும் உணவு நிலையங்களில் நேற்று திடீர் பரிசோதனை இடம்பெற்றது. இதன்போது மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளும் கைப்பற்றப்பட்டன.

உணவகங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கின்மை, நீண்ட நாட்களுக்கு உணவுகளை குளிர்சாதனப்பெட்டிகளில் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரம் போன்றன கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுசுகாதார பரிசோதகர் ஏ.எம். பாரூக் தலைமையிலான பொதுசுகாதார பரிசோதகர்களினால் பரிசோதிக்கப்பட்டது. மனித நுகர்வுக்கு பொருத்த மற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளை வைத்திருந்த மூன்று பேர் மீது நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

# இராணுவ தொழில்நுட்பங்களை திருடும் செயலில் சீனா ஈடுபடும்

## அமெரிக்கா குற்றச்சாட்டு



**நியூயோர்க், மார்ச் 30**

**இராணுவம் சார் விடயங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை திருடும் செயலில் சீனா ஈடுபடும் என்று அமெரிக்கா சாடியுள்ளது.**

சீனாவின் ஜனாதிபதியாக மூன்றாவது முறையாக ஸி ஜின் பிங் பொறுப்பேற்றபின், அவர் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாட்டில் பேசும் போது, பாதுகாப்பு துறையில் நவீனத்துவம் மற்றும் சீன படையை இரும்பு பெருஞ்சுவர் போன்று கட்டமைக்க வேண்டும் என்றார்.

எனினும், அமெரிக்காவின் பாதுகாப்பு நிபுணர்கள், இராணுவ விடயங்களை சீனா உளவு வேலைகள் மற்றும் மேற்கத்தேய தொழில் நுட்ப திருட்டில் ஈடுபடும் என கூறியுள்ளனர். இராணுவம் மற்றும் குடிமக்கள் ஒருங்கிணைப்புடன் இவை நடைபெறும் என்றும் கூறுகின்றனர்.

இதுபற்றி அமெரிக்க விமான படையின் ஓய்வு பெற்ற கேணல் டெர்ரி தோம்சன், 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'வுக்கு அளித்த பேட்டியில் சீனா பெரும்பாலும் என்ஜின் மற்றும் இயந்திர நடைமுறை தொழில் நுட்பங்களை திருடுகிறது. இராணுவ ஆயுதங்கள் பற்றிய முக்கிய தகவல்களை பெறுவதற்காக உளவாளிகள், அழகிகளை பயன்படுத்துவது, அமெரிக்க ஒப்பந்ததாரர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் அரசு அதிகாரிகளை லஞ்சம் கொடுத்து ஈர்ப்பது, இணையதள செயல்பாடுகளின் வழியே உயர்தொழில் நுட்பங்களை திருடுவது போன்ற வேலைகளில் சீன உளவு பணி அமைகிறது.

மேற்கு பசுபிக் பகுதியில் அமெரிக்க படைகளை அதிக அளவில் குவிக்க வேண்டிய அவசர தேவை ஏற்பட்டு உள்ளது. அமெரிக்க தொழில் நுட்பங்களை பெறுவதில் இருந்து தடுக்கும் வகையில் சீன இராணுவத்தின் தொடர்பை துண்டிக்க வேண்டி உள்ளது.

அமெரிக்காவின் எவ் -22 போர் விமானம் போன்று, 5ஆம் தலைமுறை போர் விமானம் ஒன்றை சீனா வைத்துள்ளது. இது தொடர்ச்சியான அறிவு சார் சொத்துகளை திருடுவதன் வழியே நடந்துள்ளது என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது. (ஐ)

# யுத்தத்துக்கு எதிராக சித்திரம் சிறுமியின் தந்தைக்கு சிறை!




மொஸ்கோ, மார்ச் 30

யுத்தத்துக்கு எதிரான சித்திரங்களை வரைந்த ரஷ்ய சிறுமியின் தந்தைக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், அவர் ரஷ்யாவிலிருந்து தப்பி வெளியேறியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

மகள் யுத்தத்துக்கு எதிரான படங்களை வரைந்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் தந்தைக்கு ரஷ்ய நீதிமன்றம் இரண்டரை வருட சிறைத் தண்டனை வழங்கியது. எனினும் நீதிமன்றம் இந்தத் தண்டனையை அறிவித்தவேளை தந்தை நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

வீட்டுக்காவலில் இருந்து அவர் தப்பிச்சென்றுவிட்டார் என நீதிமன்றத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். அவர் எங்கிருக்கின்றார் என்பது தெரியவில்லை என அவரின் சட்டத்தரணி பி. பி. ஸிக்கு தெரிவித்துள்ளார்.

யுத்தத்துக்கு எதிரான படங்களை வரைந்த குற்றச்சாட்டின் கீழ் 13 வயது மாசா இரண்டு மாதங்களுக்கு முன்னர் சிறுவர் இல்லத்துக்கு அனுப்பப்பட்டார்.

இதனை தொடர்ந்து ரஷ்ய இராணுவத்தை கடுமையாக விமர்சித்து வந்த தந்தை தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முதல் நாள் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார்.

ரஷ்ய இராணுவத்தை அவமதித்தமைக்காக தண்டனை வழங்கப்பட்டுள்ள பலரில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய உளவுச் செய்மதியை விண்ணில் ஏவியது இஸ்ரேல்!



ஜெருசலேம், மார்ச் 30

புதிய உளவுச் செய்மதி ஒன்றை இஸ்ரேல் நேற்று புதன் கிழமை விண்வெளிக்கு ஏவியது.

இஸ்ரேலின் மத்திய பிராந்தியத்திலுள்ள விண்வெளி ஏவுதளமொன்றிலிருந்து அதிகாலை 02.10 மணிகு இந்த செய்மதி ஏவப்பட்டதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த இராணுவ செய்மதிக்கு ழுகநம-13 என பெயரிடப்பட்டுள்ளது. இஸ்ரேலிய அரசுக்குச் சொந்தமான இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் இண்டஸ்றீஸ் நிறுவனத்தால் இந்த செய்மதி உருவாக்கப்பட்டது.

இஸ்ரேல் முதல் தடவையாக 1988ஆம் ஆண்டு செய்மதியொன்றை சுயமாக விண்வெளிக்கு அனுப்பியமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பகலில் நீதிபதியாக பணி இரவில் ஆபாசப் பட நடிகர்




நியூயோர்க், மார்ச் 30

நியூயோர்க் நீதிமன்றத்தில் நீதிபதியாக பணியாற்றி வந்த 33 வயதான கிரிகோரி ஏ. லாக் என்பவர் பகலில் நீதிபதியாகவும் இரவில் ஆபாச நடிகராகவும் இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

தனது ஒன்லி பேன்ஸ் என்ற சனலில் ரசிகர்களிடம் மாதம் 3,720 இலங்கை ரூபாய் (12 டொலர்கள் ) வசூலித்து வந்து உள்ளார். அதில் 100இற்கும் மேற்பட்ட ஆபாச காணொலிகளை பதிவு செய்துள்ளார்.

ருவிற்றர் மற்றும் இன்ஸ்ட்ராகிராம் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் கணக்கு வைத்திருக்கும் கிரிகோரி, 'நான் ஒரு நீதிபதி' என்றும், காலையில் ஒரு 'வெள்ளை கொலர்' நிபுணர். இரவில் தொழில்சார்ந்தவர் எனக் கூறியுள்ளார். மேலும் தன்னைப் பற்றிய குறிப்பில், 'முதிர்ச்சியற்றவர், முரட்டுத்தனமான, ஆபாசமானவன் ' என்று கூறியுள்ளார்.

இந்த விவகாரம் நியூயோர்க் அதிகாரிகளால் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதையடுத்து அவர் நீதிபதி பதவியில் இருந்து பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# ரஷ்யா - உக்ரைன் யுத்தத்தை 24 மணி நேரத்தில் நிறுத்துவேன்!

## அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி



வாஷிங்டன், மார்ச் 30

"ரஷ்யா - உக்ரைன் போரை 24 மணி நேரத்தில் முடிவுக்குக் கொண்டு வர என்னால் முடியும்", என்று அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்த பேட்டியில், 'அடுத்த ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது. அதற்குள்ளாக ரஷ்யா - உக்ரைன் போர் முடிவுக்கு வராவிட்டால், அதோடு அந்த தேர்தலில் நான் வெற்றி பெற்றால், வெற்றி பெற்றவுடன் ஒரே நாளில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகும். இதற்காக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனும், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி உடனும் என்னால் எளிதாகப் பேச முடியும்.

இதேநேரத்தில், இந்த உடன்பாடு எட்டப்படுவதற்கான எனது வியூகம் குறித்து இப்போது கூற முடியாது. நான் மேற்கொள்ளும் உத்தி எளிதானதாகவும், பிரச்னைக்கு ஒரே நாளில் தீர்வு காண்பதாகவும் இருக்கும். கடந்த 2020 தேர்தலின்போது நான் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்வாகி இருந்திருந்தால் இந்த போரே ஏற்பட்டிருக்காது. ஏனெனில், அந்த அளவுக்கு எனக்கும் புடினுக்கும் இடையே நல்ல உறவு உள்ளது.

அடுத்த ஒன்றரை ஆண்டுகளுக்கு பேச்சு நடக்கும் என தோன்றவில்லை. இதேநேரத்தில், இந்த காலம் மிகவும் நீண்டது. இதற்கிடையில் போர் மிகவும் மோசமடைவதற்கான வாய்ப்பும் உள்ளது. குறிப்பிட்ட காலத்துக்குள் போர் முடிவடையாவிட்டால் அது மூன்றாம் உலகப் போராகக்கூட மாறலாம். அதற்கான வாய்ப்பும் இருக்கிறது - என்றும் கூறினார். (ஐ)

# மீண்டும் பழைய முறையில் ஐ. பி. எல். நாளை ஆரம்பம்!






சென்னை, மார்ச் 30

உலகப் புகழ்பெற்ற ஐ. பி. எல். என்று அறியப்பட்ட இந்தியன் பிறீமியர் லீக் இருபது - 20 தொடர் நாளை ஆரம்பமாகிறது.

16ஆவது பருவகாலமாக நடைபெறவுள்ள தொடரின் முதல் போட்டியில் நடப்பு சம்பியன் குஜராத் ரைட்டன்ஸ் அணிக்கும் முன்னாள் சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதவுள்ளன.

இந்தப் போட்டி அஹமதாபாத்தில் அமைந்துள்ள உலகின் மிகப் பெரிய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.



சென்னை சுப்பர் கிங்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ், குஜராத் ரைட்டன்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ், மும்பை இந்தியன்ஸ், பஞ்சாப் கிங்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் ஆகிய பத்து அணிகள் பங்குபற்றுகின்றன.

நான்கு வருடங்களின் பின்னர் பழைய முறைமைப்படி சகல அணிகளும் சொந்த மைதானத்திலும், அந்நிய மைதானத்திலும் ஒன்றையொன்று எதிர்த்தாடும் வகையில்

மார்ச் 31ஆம் திகதி ஆரம்பித்து எட்டு வாரங்கள் தொடரும் 16ஆவது ஐ. பி. எல். அத்தியாயத்தில் 74 போட்டிகள் 12 மைதானங்களில் நடைபெறவுள்ளன.

கோவிட் - 19 தொற்றுநோய் காரணமாக கடைசி 3 அத்தியாயங்களும் ஒருசில மைதானங்களிலேயே நடத்தப்பட்டன. 2020இல் இந்தியாவுக்கு வெளியே ஐக்கிய அரபு இராச்சியத்தில் முழுப் போட்டியும் நடத்தப்பட்டது. தொடர்ந்து 2021இல் ஆரம்பப் போட்டிகள் இந்தியாவின் சில மைதானங்களிலும் கடைசிப் போட்டிகள் ஐக்கிய அரபு இராச்சியத்திலும் அரங்கேறின. 2022இல் லீக் போட்டிகள் மும்பை, புனே ஆகிய மைதானங்களிலும் இறுதிச் சுற்று கொல்கத்தா, அஹமதாபாத் மைதானங்களிலும் நடத்தப்பட்டன.

இருபது 20 கிரிக்கெட் போட்டி வரலாற்றில் கின்னஸ் சாதனையை ஏற்படுத்தும் வகையில் அஹமதா பாத், நரேந்த்ர மோடி விளையாட்டரங்கில் ஒரு இலட்சத்து ஆயிரத்து 556 இரசிகர்கள் 2022 இறுதிப் போட்டியைக் கண்டுகளித்தனர்.

அந்த இறுதிப் போட்டியில் முதலாவது ஐ. பி. எல். சம்பியன் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை முற்றிலும் எதிர்பாராத விதமாக 7 விக்கெட்களால் வெற்றி கொண்ட ஹார்திக் பாண்டியா தலைமையிலான குஜ ராத் டைட்டன்ஸ் சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.

2023 ஐ. பி. எல். கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் பத்து அணிகளும் தலா 14 லீக் போட்டிகளில் விளையாடும். ஒவ்வோர் அணியும் 7 போட்டிகளை சொந்த மைதானத்திலும் 7 போட்டிகளை பிற அணிகளின் மைதானத்திலும் விளையாடவேண்டும்.

10 அணிகளும் 2 குழுக்களாக வகுக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படும். ஒரு குழுவில் இடம்பெறும் அணிகள் ஒன்றையொன்று சொந்த மண்ணிலும் பிற அணிகளின் மண்ணிலும் 2 தடவைகள் எதிர்த்தாடும். அதாவது ஒவ்வோர் அணியும் தத்தமது குழுவில் 8 போட்டிகளில் விளையாடும். இதேவேளை மற்றைய குழுவில் இடம்பெறும் 4 அணிகளை ஒரு தடவையும் எஞ்சியிருக்கும் அணியை 2 தடவைகளும் எதிர்த்தாடும்.

**இறுதிச் சுற்று**

இறுதிச் சுற்று 4 போட்டிகளைக் கொண்டதாகும். லீக் சுற்று முடிவில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் முதலாவது தகுதிகாண் சுற்றில் விளையாடும். அதில் வெற்றிபெறும் அணி நேரடியாக இறுதிப் போட்டியில் விளையாட தகுதிபெறும்.

அணிகள் நிலையில் 3ஆம், 4ஆம் இடங்களைப் பெறும் அணிகள் நீக்கல் போட்டியில் விளையாடும். நீக்கல் போட்டியில் வெற்றிபெறும் அணி முதலாவது தகுதிகாணில் தோல்வி அடைந்த அணியை 2ஆவது தகுதிகாண் போட்டியில் சந்திக்கும்.

இரண்டாவது தகுதிகாண் போட்டியில் வெற்றி பெறும் அணி, முதலாவது தகுதிகாண் போட்டியில் வெற்றியீட்டிய அணியை 16ஆவது ஐ. பி. எல். சம்பியனைத் தீர்மானிக்கும் இறுதிப் போட்டியில் எதிர்த்தாடும்.

**அணிகளும் தலைவர்களும்**

சென்னை சுப்பர் கிங்ஸ் - மஹேந்த்ர சிங் தோனி, டில்லி கப்பிட்டல்ஸ் - டேவிட் வோர்ணர், குஜராத் ரைட்டன்ஸ்: ஹார்திக் பாண்ட்யா, கொல்கத்தா நைற் ரைடர்ஸ் - (பதில் தலைவர்) நித்திஷ் ராணா, லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் - கே. எல். ராகுல், மும்பை இந்தியன்ஸ்: ரோஹித் சர்மா, பஞ்சாப் கிங்ஸ் - ஷிகர் தவான், ராஜஸ்தான் றோயல்ஸ்: சஞ்சு சாம்சன், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் - பவ் டு பிளெசிஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - அய்டன் மார்க்ரம்.

## 100 சர்வதேச கோல்கள் மெஸ்ஸி புதிய மைல்கல்!



புவனஸ்அயர்ஸ், மார்ச் 30

ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்ட அணியின் தலைவர் லயனல் மெஸ்ஸி, தனது 100ஆவது சர்வதேச கோலை அடித்துள்ளார்.

கியூராசாவ் - ஆர்ஜென்ரீனா அணிகளிடையேயான சிநேகபூர்வ போட்டியிலேயே அவர் இந்த மைல்கல்லை எட்டினார்.

ஆர்ஜென்ரீனாவின் சான்டியாகோ டெல் எஸ்டேரோ நகரில் செவ்வாய்க் கிழமை (இலங்கை நேரப்படி நேற்று காலை) நடைபெற்ற இப்போட்டியில் 7-0 கோல்களால் ஆர்ஜென்ரீனா வென்றது.

இந்தப் போட்டியில் லயனல் மெஸ்ஸி ஹட்ரிக் கோல்களை அடித்தார். போட்டியின் 20, 33, 37 ஆவது நிமிடங்களில் அவர் அடித்தார். இதன் மூலம் சர்வதேச போட்டி களில் மெஸ்ஸி புகுத்திய கோல் எண்ணிக்கை 102 ஆக அதிகரித்தது.

சர்வதேச ரீதியில் ஆகக் கூடுதலான கோல்களைப் அடித்த வீரர்களில் லயனல் மெஸ்ஸி 3ஆவது இடத்தில் உள்ளார். போர்த்துகல் வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ 122 கோல்களையும் ஈரா னிய வீரர் அலி தாயி 109 கோல்களையும் அடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரி -20 தரவரிசை: ஹசரங்கவை பின்தள்ளி முதலிடத்தில் ரஷித் கான்




டுபாய், மார்ச் 30

இருபது - 30 பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இலங்கை சுழல்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்கவை பின்னுக்குத் தள்ளி ஆப்கானிஸ்தான் கப்டன் ரஷித் கான் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

சமீபத்தில் ஷார்ஜாவில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஆப்கானிஸ்தான் 2-1 என்ற வரலாற்று வெற்றியை பெற்றது. இதில் ரஷித் கான் முக்கிய பங்காற்றினார்.

ரஷித் 2018 பெப்ரவரியில் முதல் முறையாக தரவரிசையில் முதலிடத்தை எட்டினார், மீண்டும் கடந்த ஆண்டு நவம்பரில் முதலிடத்தைப் பிடித்தார்.

ஆப்கானிஸ்தானின் இளம் வீரர் ஃபசல்ஹக் பரூக்கி பந்துவீச்சாளர் தரவரிசையில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். அவரின் சிறந்த பெறுபேறு இது.

துடுப்பாட்டத்தில், தென்னாபிரிக்காவின் ரிலீ ரோசோவ் மற்றும் ரீசா ஹென்ட்ரிக்ஸ் சடுதியாக முன்னேறியுள்ளனர். சமீபத்தில் முடிவடைந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் 204.76 ஓட்டவிகிதத்தில் 172 ஓட்டங்களை எடுத்து ஹென்ட்ரிக்ஸ், எட்டு இடங்கள் முன்னேறி 12ஆவது இடத்தைப் பிடித்தார். மறுபுறம், ரோசோவ் இரண்டு இடங்கள் முன்னேறி 6ஆவது இடத்திற்கு முன்னேறினார்.

மேற்கிந்தியத்தீவுகளின் ஜோன்சன் சார்ள்ஸ் சமீப காலங்களில் தர வரிசையில் மிகப்பெரிய தாவல்களில் ஒன்றை செய்தார். தென்னாபிரிக்காவுக்கு எதிராக செஞ்சூரியனில் 46 பந்துகளில் 118 ஓட்டங்கள் விளாசியதை தொடர்ந்து, 92 இடங்கள் முன்னேறி 17ஆவது இடத்துக்கு முன்னேறினார். (ஐ)

# மொட்டு கட்சிக்கு புத்துயிர் கொடுக்க மகிந்த களத்தில்

## முழு வேகத்தில் செயல்பாடுகள் தீவிரம்



கொழும்பு, மார்ச் 30

**நாட்டின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக அடிமட்டத்தில் வீழ்ந்து கிடக்கும் மொட்டுக் கட்சியைத் தூக்கி நிமிர்த்துவதற்கு மகிந்த ராஜபக்ஷ முழு வேகத்தில் களமிறங்கியுள்ளார்.**

அண்மையில் மொனராகலையில் முதலாவது கூட்டத்தை நடத்திக் கட்சியைப் பலப்படுத்தும் வேலைத் திட்டத்தை அவர் ஆரம்பித்து வைத்துள்ளார்.

கொழும்பு விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தைக் கட்சியைப் பலப்படுத்தும் ஒரு மத்திய நிலையமாக அவர் மாற்றியுள்ளார்.

அந்த வீடு பல கோடி ரூபா செலவில் அண்மையில்தான் புதுப்பிக்கப்பட்டது. அங்கு அமைக்கப்பட்ட மண்டபம் சந்திப்புக்களை நடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் இருந்த மொட்டு இப்போது 95 எம்.பிக்களை மாத்திரம் கொண்டுள்ளது. அவர்களுள் பலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நிற்கின்றார்கள். இவர்கள் எல்லோரையும் ஒன்றிணைத்துப் பிரிந்து சென்ற கட்சியின் ஆதரவாளர்கள்-வாக்காளர்கள் அனைவரையும் மீண்டும் இணைத்துக் கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் இப்போது மஹிந்த இறங்கியுள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாத இறுதிக்குள் கட்சியைப் பலப்படுத்தி விட வேண்டும் என்ற இலக்கைக் கையில் எடுத்துக்கொண்டு மகிந்த களமிறங்கியுள்ளார் என்று அவரது வட்டாரம் தெரிவிக்கின்றது. (அ)

# பொலிஸ்மா அதிபருக்கு பதவி நீடிப்பு அனுமதி வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, மார்ச் 30

பொலிஸ் மா அதிபர் சீ.டீ. விக்ரம ரத்னவின் பதவிக்காலத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான பத்திரத்தை மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார். இந்நிலையிலேயே அமைச்சரவை அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

பொலிஸ் மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்னவுக்கு 60 வயது நிறைவடையும் நிலையில் அவர் கடந்த மார்ச் 26 ஆம் திகதி ஓய்வு பெறுச் செல்லவிருந்தார்.

அந்த வகையில் அவரது சேவையை மேலும் மூன்று மாத காலங்களுக்கு நீடிக்கவே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கிணங்க அவர் எதிர்வரும் மூன்று மாத காலத்திற்கு பொலிஸ் மா அதிபர் பதவியை வகிப்பார் என அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். (அ)

# அரச, தனியார் சிறுவர் இல்லங்களை தொடர்ச்சியாக கண்காணிக்க முடிவு!

## மனித உரிமைகள் ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 30

அரச மற்றும் தனியார் சிறுவர் இல்லங்களை தொடர்ச்சியாகக் கண்காணிக்க வழிமுறையை தயாரித்து அதன் ஊடாக இனங்காணப்படும் பிரச்னைகளுக்கான தீர்வை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக் குழு வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு, அண்மையில் ரக்வானை பிரதேசத்தில் அமைந்துள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் 11 வயது சிறுமியொருவர் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர் என செய்திகள் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தன.

அந்த செய்திக்கமைய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறித்த சிறுவர் இல்லம் தொடர்பில் கண்காணிப்பை முன்னெடுத்திருந்தது.

இதன்போது இனங்காணப்பட்ட காரணிகளுக்கமைய பெற்றோரின் பாதுகாப்பை இழந்த நிலையில், இது போன்ற சிறுவர் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் தொடர்பில் விசேட கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெற்றது.

இதில் தேசிய நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புடன் தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் அரச திணைக்களங்களின் அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

இதில், வெளிப்படுத்தப்பட்ட காரணிகளுக்கமைய முதல்கட்ட நடவடிக்கையாக சப்ரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள அரச மற்றும் தனியார் சிறுவர் இல்லங்களை தொடர்ச்சியாகக் கண்காணிக்க வழிமுறையை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

சிறுவர் இல்லங்களில் காணப்படும் பிரச்னைகள் மற்றும் தேவைகளைக் கண்டறிந்து, அதற்குரிய தீர்வுகளை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இரு மாதங்களுக்குள் இந்த நடவடிக்கைகளின் முன்னேற்ற அறிக்கையை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் சமர்ப்பிக்குமாறும் இதன்போது ஆலோசனை வழங்கப்பட்டது. (ஐ)

# கால்நடைகளை பராமரிக்க விரும்புவோர் வடக்கு ஆளுநரை தொடர்பு கொள்ளலாம்!

யாழ்ப்பாணம், மார்ச் 30

வடக்கு மாகாணத்தில் உரிமையாளர்களால் கைவிடப்பட்ட கால்நடைகளை பராமரிப்பதற்கான காணிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் கால்நடைகளை பராமரிக்க விரும்புவோர் ஆளுநர் செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்று வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உரிமையாளர்களால் கைவிடப்பட்ட கால்நடைகளை பராமரிப்பதற்கு ஏற்ற இடங்களை தெரிவு செய்யுமாறு கேட்டதற்கு இணங்க 22 பிரதேச செயலகங்களில் அதற்கான இடங்களை தெரிவு செய்து அனுப்பி உள்ளார்கள்.

யுத்த நிலைமை முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட காலம் முதல் இன்று வரை கால்நடைகள், குறிப்பாக மாடுகள் பெருமளவில் உரிமையாளர்களால் கைவிடப்பட்டு கட்டாக்காலிகளாக பொது இடங்களில் அலைந்து திரிகின்றன.

இவ்வாறான கால்நடைகள் வீதிகளில் விபத்துக்கு உள்ளாகி இறப்பதும் நோய்வாய்ப்பட்டுச் சிகிச்சை இன்றி மரணிப்பது மட்டுமின்றி, விவசாய மற்றும் பயிர்ச்செய்கை நிலங்களில் பயிர்களை நாசமாக்கி விவசாயிகளுக்குப் பொருளாதாரப் பாதிப்புகளையும் ஏற்படுத்தி வருகின்றன.

சில சந்தர்ப்பங்களில் இவ்வாறான கால்நடைகள் திருடப்பட்டு வயது, பால் வித்தியாசம் இன்றி இறைச்சிக்காக வெட்டப்படும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றமை மிகுந்த கவலைக்குரியது. மனிதாபிமான சிந்தனையில் கைவிடப்பட்ட கால்நடைகள் உள்ளிட்ட சகல பிராணிகளுக்குமான நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றுக்கு உரிய முறையில் உணவளிக்கவும். நோய் மற்றும் பிற இயற்கை அனர்த்தம் உள்ளிட்ட காரணிகளால் இந்த விலங்குகள் பாதிப்படைவதைத் தடுப்பதற்கான செயன்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டும்.

இந்தக் கருத்துக்கு அமைய கால்நடைகளுக்கான பாதுகாப்பான காப்பகங்களைத் தேவைக்கேற்ப வட மாகாணம் எங்கும் அமைத்துப் பராமரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்படி கால்நடைகளுக்கான காப்பகங்களை விரும்பிய பகுதிகளில் அமைத்துப் பராமரிக்க விரும்பும் சமய ஸ்தாபனங்கள், தொண்டு நிறுவனங்கள்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மிருக வதைக்கு எதிரான இயக்கங்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துடன் தொடர்பு கொண்டு தமது விருப்பத்தை கடிதம் மூலம் தெரிவிக்க முடியும் - என்றார். (ஐ)

# தீவகத்தில் குற்றங்களை தடுக்க மண்டைதீவு சந்தியில் சோதனை!

யாழ்ப்பாணம், மார்ச் 30

தீவுப் பகுதியில் இடம்பெறும் திருட்டு உள்ளிட்ட குற்றச்செயல்களை கட்டுப்படுத்த மண்டைதீவு சோதனைச் சாவடியில் பரிசோதனைகளை மேற்கொள்ள முடிவு எட்டப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக நேற்றைய தினம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற உயர்மட்ட கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எட்டப்பட்டது.

மேலும், மண்டைதீவு சந்தியிலுள்ள சோதனை சாவடியில் கட்டாயமாக ஞாயிற்றுக்கிழமைகளில் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும்.

குறிப்பாக புங்குடுதீவிலிருந்து படகுகள் மூலம் வேறு பகுதிகளுக்கு மாடு மற்றும் பொருட்கள் திருடப்படுகின்றன.

எனவே, இந்தக் குற்றங்களை தடுக்க கடற்படையினர் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இதன்போது கோரப்பட்டது. (ஐ-03)

# 150 கிலோ கஞ்சா யாழில் சிக்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 30

மாதகல் பகுதியில் கடத்தி வரப்பட்ட 150 கிலோ கஞ்சா நேற்று முன்தினம் இரவு கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டு மாதகலில் இறக்கி வைத்திருந்தவேளை இது கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது. இவ்வாறு கஞ்சா கைப்பற்றப்பட்டபோதும் சந்தேக நபர்கள் எவரும்கைது செய்யப்படவில்லை.

மாதகல் கடற்கரையில் பற்றைக்குள் மறைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட இக் கஞ்சாவைத் தொடர்ந்து அருகில் மறைத்து வைத்திருந்த படகை யும் கடற்படையினர் கைப்பற்றினர். (அ)

# ரணிலிடம் 12 ஆண்டுகளுக்கு நாட்டை ஒப்படைத்தால் இலங்கை உச்சம் தொடும்!

## சுட்டிக்காட்டுகின்றார் வஜிர அபேவர்தன

கொழும்பு, மார்ச் 30

இலங்கை முன்னோக்கிச் செல்லவேண்டுமானால் தேசிய இணக்கப்பாடு அவசியம். அந்த இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள கட்சிகள் முன்வர வேண்டும் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

சிங்கள தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலொன்றின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு: இலங்கையில் இனியும் தனிக் கட்சி ஆட்சிமுறை ஏற்புடையதாக இருக்காது. எந்த கட்சியாக இருந்தாலும் நிலைமை இதுதான். தேசிய இணக்கப்பாடு இருந்தால் மட்டுமே இலங்கையால் ஆசியாவில் சிறந்த நிலைமைக்கு வர முடியும். அவ்வாறு இல்லாமல் அரசியல் நோக்கி செயற்பட்டால் கீழ்நோக்கிதான் செல்ல வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலகத் தலைவர். அவர் எமது நாட்டுக்கு கிடைத்த மிகப் பெரிய சொத்து. இன்னும் 12 ஆண்டுகள்வரை அவரிடம் ஆட்சியை ஒப்படைத்தால் இலங்கை சிறந்த நிலைக்கு வரும். இதை மக்கள் தற்போது புரிந்துகொண்டுள்ளனர். குறுகிய காலப்பகுதிக்குள் ரணில் விக்கிரமசிங்க பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் அல்ல, நாட்டை மீட்டெடுப்பதே முக்கியம். அதற்கான வேலைத்திட்டங்களே முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, காலைவாரும் அரசியலை செய்யாதிருந்தால் ஜனாதிபதி நிச்சயம் எமது நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வார்-என்றார். (அ)

## வடக்கு...

மூவரை தவறாது பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில், வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சைவக் கோயில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் சைவமக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்னைகள் தொடர்பாக ஆராய்ந்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கிறிப்டோ...

வேண்டும்.

பொதுமக்கள் விசாரணைகளையும் அவதானிக்கப்படும் அபிவிருத்திக்களையும் கருத்தில்கொண்டு, இலங்கை மத்திய வங்கியானது கிறிப்டோ நாணயங்களைப் பயன்படுத்துவதுடனும் முதலீடு செய்வதுடனும் தொடர்புடைய குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகள் பற்றி பொதுமக்களுக்கு மீளவும் வலியுறுத்துகின்றது.

கிறிப்டோ நாணயம் என்பது ஒரு நாட்டின் நாணய அதிகார சபையால் இன்றி தனியார் நிறுவனங்களினால் உருவாக்கப்படுகின்ற மெய்நிகர் நாணய வகையொன்றாகும்.

கிறிப்டோ - வர்த்தகம், இலாபகரமான முதலீடொன்றாக சில நிறுவனங்களினால் பரந்தளவில் ஊக்குவிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எனினும், பொதுமக்கள் தாம் மேற்கொண்ட கிறிப்டோ முதலீடுகளின் மூலமாக பாரியளவில் நட்டங்களை சந்தித்துள்ளனர் என்றும் சில சந்தர்ப்பங்களில் கிறிப்டோவுடன் தொடர்புடைய திட்டங்களூடாக முன்னெடுக்கப்பட்ட நிதியியல் மோசடிகளுக்கும் ஆளாகின்றனர் என்றும் இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கப்பெறுகின்ற அண்மைய முறைப்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

கிறிப்டோ நாணயத்தைப் பயன்படுத்துபவர்களுக்கு ஏற்படும் குறிப்பிடத்தக்க நிதியியல், தொழிற்பாட்டு, சட்ட மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் அதேபோன்று வாடிக்கையாளர் பாதுகாப்பு கரிசனைகள் பற்றி இலங்கை மத்திய வங்கி 2018, 2021, அத்துடன் 2022,ஆம் ஆண்டுகளில் ஊடக வெளியீடுகளினூடாக ஏற்கனவே எடுத்துக் காட்டியுள்ளது.

மேலும், கிறிப்டோ நாணயங்கள், இலங்கையில் சட்டப்பூர்வமான நாணயமானவையல்ல என்பதுடன் நாட்டில் அவற்றின் பயன்பாட்டுடன் தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் பாதுகாப்புக்களும் காணப்படவில்லை.

கிறிப்டோ நாணயத்தை கொள்வனவு செய்வதற்கு பற்று அட்டைகள் மற்றும் கடனட்டைகள் போன்ற இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

கிறிப்டோ நாணயம் முறைசாரா வழிகள் ஊடாக தொழிற்படுவதனால், தேசிய பொருளாதாரத்துக்கு அது பங்களிப்பதில்லை என்பதுடன் நாட்டின் பெறுமதிமிக்க வெளிநாட்டு நாணயத்தையும் இழக்க நேரிடுகின்றது.

கிறிப்டோ முதலீடுகளை அடிப்படையாகக்கொண்டு, உயர்ந்தளவான வருவாய்களுக்கான வாக்குறுதியுடன் தொழிற்படுகின்ற பல எண்ணிக்கையிலான நிதியியல் மோசடிகள் அதிகரித்து வருகின்றன தொடர்பிலும் பொதுமக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

கிறிப்டோ நாணயத்தில் பணத்தை முதலீடுசெய்வதன் மூலம் அதிகளவிலான வருமானத்தை வழங்குவதாக உறுதியளித்து தனிநபர்களை ஏமாற்றி அவர்களிடமிருந்து பணத்தைப் பெறுவதும் அதேபோன்று மோசடியான கிறிப்டோ நாணய திட்டங்களில் முதலீடுசெய்யுமாறு கூறி தனிப்பட்டவர்களை ஏமாற்றுவதும் இம்மோசடிகளில் உள்ளடங்குகின்றன - என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## மாதம்ப...

நிறுத்த வேண்டும் என்று சிவசேனை தலைவர் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்துக்கு எழுதிய கடிதத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், சைவ மக்கள் வாழும் மாதம்பை, சிலாபம் பகுதிகளில் இன்றும் - நேற்றும் - நேற்று முன்தினமுமாக மூன்று நாட்கள் கிறிஸ்தவ மத மாற்ற வாலிப எழுப்புதல் கூட்டத்தை இவர்கள் நடத்தவிருந்தனர் என்றும் சிவசேனை தெரிவித்துள்ளது.

இதனிடையே, கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் - மானிப்பாயில் போல் தினகரன் தலைமையில் ஆசீர்வாத ஜெபக் கூட்டம் என்ற பெயரில் நடைபெறவிருந்த நிகழ்ச்சியும் சிவசேனையால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பேருந்து...

இதேவேளை, குறைந்தபட்ச பேருந்து கட்டணம் 30 ரூபாயாகவும், அதிகூடிய கட்டணமாக 1,175 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய 34 ரூபாயாக இருந்த ஆரம்பக்கட்டணம் 30 ரூபாயாகவும், 42 ரூபாய் கட்டணம் 37 ரூபாயாகவும், 54 ரூபாய் கட்டணம் 48 ரூபாயாகவும்,67 ரூபாய் கட்டணம் 59 ரூபாயாகவும், 80 ரூபாய் கட்டணம் 70 ரூபாயாகவும் அறவிடப்படும் என்று போக்குவரத்து ஆணைக்குழு தலைவர் ஷசி வெல்கம தெரிவித்தார்.

இதேசமயம், இந்த விலை குறைப்பை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கமும் ஏற்றுள்ளதாக அதன் தலைவர் கெமுனு விஜயரத்ன அறிவித்துள்ளார். (ஐ)

## ஈஸ்ரர்...

கட்டுவாப்பிட்டி தேவாலய குண்டுதாரியான அச்சி முஹம்மது ஹஸ்துனின் மனைவியான சாரா ஜாஸ்மின் இருந்ததும் கண்டறியப்பட்டுள்ளது.

2019 ஏப்ரல் 26 ஆம் திகதி சாய்ந்தமருது பிரதேசத்தில் வீடொன்றில் தங்கியிருந்த வேளையில் தற்கொலை குண்டு வெடித்ததில் மரணமடைந்தவர்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டன.

உயிரிழந்தவர்களை அடையாளம் காண்பதற்காக, குற்றவியல் விசாரணைகளில் நிபுணர்களால் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், அங்கு இறந்தவர்களில் புலஸ்தினி மகேந்திரனும் இருந்துள்ளார்.

புலஸ்தினி மகேந்திரனின் தயாரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட டீ. என். ஏ மாதிரி, குற்றம் இடம்பெற்ற இடத்திலிருந்து பெறப்பட்ட மாதிரி, தாய்க்கும் மகளுக்கும் இடையில் உயிரியல் ரீதியான தொடர்பு ஆகியவற்றை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இவை உறுதிப்படுத்தப்பட்டன.

புலஸ்தினி மகேந்திரன் அவருடைய தாயாரான ராஜரத்னம் கவிதா ஆகியோருக்கு இடையிலான தொடர்பு 99.9999 சதவீதம் உறுதியானது என்பது அரச பகுப்பாய்வு திணைக்களத்தால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, 2019 ஏப்ரல் 26 ஆம் திகதி சாய்ந்தமருது பிரதேசத்தில் வீடொன்றில் தங்கியிருந்த போது இடம்பெற்ற தற்கொலை குண்டு வெடிப்பில் சாரா ஜஸ்மின் என்றழைப்படும் புலஸ்தினி மகேந்திரன் என்பவர் மரணமடைந்துவிட்டார் என்பது உறுதியானது - என்று நீதிமன்றத்துக்கு பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். (ஐ)

# ஏப்ரல் 4இல் கூடுகிறது தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 30

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்கள் எதிர்வரும் 4ஆம் திகதி கூடவுள்ளனர்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி. புஞ்சிஹேவா கருத்து வெளியிடுகையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் நீண்ட கலந்துரையாடலை நடத்த வேண்டியுள்ளது எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான தபால் மூல வாக்களிக்கும் பணி நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த நிலையில், அது கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பணம் செலுத்தாததால் தபால் ஓட்டுகளை அச்சிடுவதை அரசு அச்சகம் நிறுத்தியதால் தபால் வாக்களிப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வவுனியாவில்

கொள்ளுமாறும் ஆலய நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலிருந்த வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் கோயிலில் இருந்து சிவலிங்கம் பெயர்க்கப்பட்டு உடைத்து எறியப்பட்டதுடன் அங்கிருந்த விநாயகர், அம்மன் சிலைகள் பெயர்த்து எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. அத்துடன், அங்கு வழிபடப்பட்டு வந்த சூலங்களும் பிடுங்கப்பட்டு வீசி எறியப்பட்டிருந்தன. இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய...

அனைவரும் சமூக ஆர்வலர்கள் என்பதை அங்கீகரிப்போம். இதை முறியடிக்க நாம் ஒன்றுபட வேண்டும்.

”இது ஒரு பயமுறுத்தும் சட்டமூலம். இந்த நாட்டின் அனைத்து குடிமக்களும் இது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்த சட்டம் நடைமுறையானால், இன்று நாங்கள் இங்கு பேசுவது போல் சுதந்திரமாகப் பேச முடியாது. ஜனநாயகத்துக்கு இடமில்லை. அவர்கள் நம் அனைவரையும் கைது செய்வார்கள் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் தவிசாளர் ஜீ. எல். பீரிஸூம் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கல்வித்துறையில்...

சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டில் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியூடாக நல்ல கல்வி விருத்திக்கு வழிவகுக்கிறதா என்பதை நாம் கண்டறிய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நேற்று பாடசாலை ஒன்றின் நிகழ்வில் பங்கேற்ற அவர், எமது நாட்டின் உள்ளூராட்சி மன்றங்களை வெளிநாட்டு உள்ளூராட்சி மன்றங்களுடன் ஒருங்கிணைத்து “சிஸ்டர் சிற்றி“ நட்பு எண்ணக்கருவின் ஊடாக அபிவிருத்தி செய்யப்படும் என்று தான் கூறும் போது, இது குறித்த சரியான புரிதல் இல்லாத இந்நாட்டிலுள்ள ஒரு சில அறிவீனர்கள் கேலி செய்கின்றனர்.

எவர் எவ்வாறான கேலி செய்தாலும், இந்நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளின் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைக்கப்பட்டு நாட்டிலுள்ள பாடசாலைகள் மற்றும் நகரங்களை மேம்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

மேலும், நமது நாட்டிலுள்ள சில பாடசாலைகளில் ஓர் ஆங்கில ஆசிரியர் கூட இல்லாத நிலை காணப்படுவதாகவும், இது குறித்து எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பி எப்படியாவது அந்த ஆசிரியர்களை வழங்க ஏற்பாடு செய்வதாகவும் குறிப்பிட்டார்.

எழுத்தறிவில் உயர் மட்டத்தில் இருக்கிறோம் என்று கூறப்பட்டாலும், அந்த கணிப்பீட்டை நம்பமுடியாது எனவும் தெரிவித்த அவர், இந்நாட்டில் சம்பிரதாய முறையிலான கல்வி முறைமையில் மாற்றம் வர வேண்டும் எனவும், இதனூடாக உயர் எழுத்தறிவை எட்ட முடியும் - என்றும் கூறினார். (ஐ)

## முச்சக்கர...

தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்தார்.

முன்னதாக, முதல் கிலோமீற்றருக்கு 120 ரூபா, அதனைத் தொடர்ந்து 100 ரூபாய் எனும் அடிப்படையிலும், அனைத்து கிலோமீற்றருக்கும் 100 ரூபாய் எனும் அடிப்படையிலும் வசூலிக்கப்பட்டன.

இந்த நிலையில், நள்ளிரவு முதல் கிலோமீற்றருக்கு 100 ரூபாய் அதனைத் தொடர்ந்து 80 ரூபாய் எனும் அடிப்படை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஈரோஸ்...

ஒருவரும், அவரின் கட்சி ஆதரவாளரும் இந்த கொலைகளை புரிந்தனர்.

அவர்களுக்கும் கட்சி செயலாளருக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கு காரணமாக 1997 ஜூலை 17ஆம் திகதி இந்த கொலை நடந்தது.

குற்றம் சாட்டப்பட்ட இருவரும் கட்சிப் பணிமனையில் தங்கியிருந்த கட்சியின் செயலாளர் மீதும், அவரின் குடும்பத்தினர், கட்சி ஆதரவாளர் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்தியும் வாளால் வெட்டியும் தாக்குதலை நடத்தினர்.

இதில் கட்சி செயலாளரின் 3 வயது பிள்ளையான கிறேமன் கிஷான் மற்றும் கட்சி உறுப்பினரான சந்திரகுமார் ஆகிய இருவரும் உயிரிழந்தனர். பிரபாகரன் அவரின் மனைவி மற்றும் கட்சி ஆதரவாளர்கள் இருவர் உட்பட 4 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த யோகநாதன் ஒரு கையையும், புவிராஜசிங்கம் இரு கைகளையும் இழந்தனர்.

தாக்குதலை மேற்கொண்ட முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் சமீல ரஜீந்தர, கட்சி ஆதரவாளரான விவேகமூர்த்தி ஆகியோர் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் தொடர்ந்து கடந்த 25 வருடங்களாக வழக்கு விசாரணைகள் நடந்தன.

இந்த நிலையில், இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று அளிக்கப்பட்டது.

நீதிபதி தனது தீர்ப்பில், இருவரும் மனித படுகொலை மற்றும் காயத்தை ஏற்படுத்தியமை போன்ற 6 குற்றச்சாட்டுக்களில் தலா ஒருவருக்கு 3 இருந்து 5 வரையான குற்றச்சாட்டுகளுக்கு 5 ஆயிரம் ரூபாய் அபாதம் - 10 வருட கடூழிய சிறைத் தண்டனையும், 6 குற்றச்சாட்டுகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபாயும் 10 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியசிறத் தண்டனையும் முதலாவது இரண்டாவது குற்றச்சாட்டுக்களுக்கு மரணதண்டனையும் வழங்கினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பால்மா விலை மேலும் குறையும்

கொழும்பு, மார்ச் 30

ஏப்ரல் முதல் வாரத்தில் பால் மாவின் விலை மேலும் குறைக்கப்படும் என பால் மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னரும் பால் மாவின் விலை குறைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மின் கட்டண உயர்வால் நுகர்வு 20 வீதம் குறைந்தது

## பொது பயன்பாடு ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 30

மின்சாரக் கட்டணத்தை அதிகரித்த இரண்டு மாதங்களுக்குப் பின்னர், மின்சாரத் தேவை சுமார் 20 வீதம் குறைந்துள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், மின் பாவனை குறைவினால், இலங்கை மின்சார சபையின் எதிர்பார்க்கப்படும் வருமானத்தை அடைவதில் சிக்கல் ஏற்படும் என்றார்.

"மார்ச் மாதத்தில் 47ஜிகா வாட்ஸ் பயன்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்தது. ஆனால், உண்மை என்னவென்றால், மார்ச் மாதத்தில் நுகர்வு 41 ஜிகா வாட்ஸை காட்டியது. அதற்குக் காரணம், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின் கட்டணத்தை 75வீதம் உயர்த்துவது பொருந்தாது என தெரிவித்தது. அது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது," எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலை தொடருமானால், இலங்கை மின்சார சபை எதிர்பார்த்த வருமான இலக்கை அடைய முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# பசுமை புரட்சியில் இலங்கை இணைந்துகொள்ள வேண்டும்

## எரிக் சொல்ஹெய்ம் அழைப்பு

கொழும்பு, மார்ச் 30

"பசுமைப்புரட்சியில்" இணைந்துகொள்ளுமாறு நோர்வேயின் முன்னாள் இராஜதந்திரியும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் காலநிலை மாற்றம் தொடர்பான ஆலோசகருமான எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்ற "இலங்கையின் தூய சக்திவலு மாநாடு - 2023" இல் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு அழைப்புவிடுத்துள்ளார்.

மேலும் உலகளாவிய ரீதியில் அபிவிருத்தியடைந்து வரும் இரு பெரும் நாடுகளான சீனாவும் இந்தியாவுமே பசுமைப்புரட்சிக்குத் தலைமைதாங்குகின்றன என்று தெரிவித்துள்ள எரிக் சொல்ஹெய்ம், இலங்கை பசுமைப்பொருளாதாரத்தை நோக்கி நகர்வதற்கான பல்வேறு வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"நாட்டின் சமாதானப்பேச்சுவார்த்தை செயன்முறையில் பங்கேற்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அழைப்புவிடுத்ததைத்தொடர்ந்து கடந்த 1998 ஆம் ஆண்டிலிருந்து நான் இலங்கையுடன் நெருக்கமாகப் பணியாற்றிவருகின்றேன்.

அதேபோன்று யுத்தத்தின் விளைவாகப் பலவருட காலத் துன்பத்துக்கும், பொருளாதார நெருக்கடிக்கும் இலங்கை முகங்கொடுத்திருந்தமையினை நான் நன்கு அறிவேன். இருப்பினும் இந்நெருக்கடிகளிலிருந்து மீண்டெழுவதற்கான இயலுமையையே இலங்கை மக்கள் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்" என்றும் எரிக் சொல்ஹெய்ம் அவரது உரையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புதுப்பிக்கத்தக்க சக்திவலு உற்பத்தியில் இலங்கை மிகச்சிறப்பான இயலுமையைக் கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள அவர், காற்றாலை மற்றும் சோலார் முறைகளிலான சக்திவலு உற்பத்தியின் மூலம் "பசுமை உற்பத்தியை" நோக்கி நகரமுடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# தமிழர்களின் காணிகள் அபகரிப்பு அரசின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலே!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாடல்

வவுனியா, மார்ச் 30

தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை அபகரிக்கின்ற செயல்பாடு அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலே என்று வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிலுள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அதனோடு இணைந்த பிரதான சூலாயுதம் அதனோடு ஏனைய விக்கிரகங்கள் பிடுங்கி எறியப்பட்ட விடயத்துக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பினராகிய நாங்கள் வன்மையான கண்டனத்தை தெரிவித்து கொள்கிறோம்.

நீண்ட காலமாக சைவ மக்களால் அந்தப் பிரதேச மலைப்பகுதி புனித பிரதேசமாக வழிபடப்பட்டு வந்த ஆலயம். திட்டமிட்ட வகையிலே அரசாங்கத்தின் முகவர் அமைப்புகளால் புனித தலம் இடித்தழிக்கப்பட்ட மிகவும் மோசமான செயலை கண்டிப்பதோடு எதிர்காலத்திலே இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுமாக இருந்தால் அல்லது அரசாங்கத்தின் முகவர் அமைப்புகளால் செயல்படுகின்ற குறிப்பாக தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வன இலாகா ஏனைய மகாவலி எல் வலயம் இப்படியாக அரசாங்கத்தின் முகவர் அமைப்புகள் தமிழர் பகுதிகளில் குறிப்பாக வட கிழக்கு தாயக பிரதேசங்களில் திட்டமிட்டு நில அபகரிப்பை இது போன்ற அமைப்புக்களின் ஊடாக மேற்கொள்வதனை கண்டிக்கின்றோம்.

தொடர்ச்சியாக இது போன்ற சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டே வருகின்றன. அரசாங்கத்துக்கு எதிராக கண்டன குரல்களை நாங்கள் மட்டுமல்ல சர்வதேசமும் இவ்விடயத்தில் தலையிட்டாலும் அரசாங்கம் இதனை பற்றி செவி சாய்ப்பதாகவே இல்லை.

இந்த விடயங்களை தொடர்ச்சியாக பார்த்து கொண்டிருக்கின்றோம். குறிப்பாக தொல்பொருள் திணைக்களம் ஏறக்குறைய 330 பிரதேசங்கள் தொல்பொருள் திணைக்களத்திற்குரிய இடமாக பிரகடனப்படுத்தியுள்ளது. இதில், வடக்கு மாகாணத்தில் மட்டும் 167 இடங்கள் தொல்பொருள் திணைக்களத்துக்கான இடமாக பிரகடனப்படுத்தி அபகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

இதில், அரசாங்கம் சம்பந்தப்படவில்லை எனக் கூற முடியாது. அரசாங்கத்தின் ஆசீர்வாதத்தோடு - அனுசரனையோடு தான் இவ்வாறான செயல்பாடுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன - என்றார். (ஐ)

# மாவட்டத்தில் ஒரு நகரத்தை அபிவிருத்தி செய்யத் திட்டம்!

## நகர அபிவிருத்தி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 30

நகர அபிவிருத்தி அதிகார சபை தனியார் துறையின் பங்களிப்புடன் தனது வருமா னத்தை கவனமாக நிரவகித்து, நாடு முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நகரத்தை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ள தாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்துக்கு அரசாங் கத்தின் நிதி பயன்படுத்தப்படாது என்றும், ஒழுங்கமைக்கப்படாத நகர்ப்புற அபிவிருத்தி நேரடியாகவும் மறைமுகமாக வும் ஒரு நாட்டின் அபிவிருத்தியை பாதிக்கிறது என்றார்.

எனவே, நாட்டின் அனைத்து நகரங்களையும் விரைவாக மேம்படுத்துவதற் கான அரச திட்டத்தை

செயல்படுத்தும் பெரும் பொறுப்பு நகர அபிவிருத்தி அதி கார சபையிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் முன்வைக் கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் கீழ் நாடு முழுவதும் 100 நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய வேலைத் திட்டம் 2020இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், 100 பின்தங்கிய நகரங்கள் கண்டறியப்பட்டு, ஒவ்வொரு நகரத்தையும் அழகுபடுத்துவதற்காக அவற்றின் அடிப்படை வசதிகள் மற்றும் பொருத்த மான உள்கட்டமைப்புகளை மேம்படுத்தியது.

இதன்படி, நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய 116 நகரங்கள் இந்தத் திட்டத்தை ஆரம்ப கட்டத்தில் தொடங்குவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டன. ஒவ்வொரு நகரத்தின் அபிவிருத்திக்கும் 20 மில்லியன் ரூபாய் பயன்படுத்தப்பட்டது.

தற்போது இந்த 116 நகரங்களின் பணிகள் நிறைவடைந்துள்ளன மற்றும் அடிப்படை பொதுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நடைபாதைகள், வடிகால் அமைப்புகள், பயணிகள் தங்குமிடங்கள் மற்றும் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட் டுள்ளன - என்றும் தெரிவிக் கப்பட்டது. (ஐ)

# ரணிலும் ராஜபக்ஷக்களும் எதிர்காலத்தில் இணையலாம்!

## எஸ். பி. திஸநாயக்க எம். பி.

கொழும்பு, மார்ச் 30

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்க பொதுஜன பெரமுன எடுத்த தீர்மானம் சிறந்தது என்பதை நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். எதிர்கால அரசியலில் ரணில், ராஜபக்ஷர்கள் ஒன்றிணைந்து செயல்படலாம் என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு - பத்தரமுல்லையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், சிறீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான எமது அரசாங்கம் எடுத்த ஒருசில தவறான தீர்மானங்கள் பொருளாதார பாதிப்பை தீவிரப்படுத்தியது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த போது பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பலமுறை அழைப்பு விடுத்தார்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரசாங்கத்தைப் பொறுப்பேற்றால் தமது எதிர்கால அரசியல் பாதிக்கப்படுமோ என்ற அச்சத்தில் அவர் அரசாங்கத்தைப் பொறுப்பேற்கவில்லை. ஆசை, பயம் என்ற காரணத்தால் அவர் பின்வாங்கினார். ஆனால், தனி ஓர் ஆசனத்தை வைத்துக் கொண்டு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை பொறுப்பேற்றார். அதுவே சிறந்த தலைமைத்துவம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும் என சிறீ லங்கா பொதுஜன பெரமுன ஏகமனதாக தீர்மானித்தது. எமது தீர்மானம் சரியானது என்பதை நாட்டு மக்கள் தற்போது ஏற்றுள்ளார்கள். எதிர்கால அரசியலில் ரணில், ராஜபக்ஷர்கள் ஒன்றிணைந்து செயல்படலாம்.

குறுகிய காலத்துக்குள் நாடு வழமை நிலைக்கு திரும்பியுள்ளது. பணவீக்கம் குறைவடைந்தவுடன் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைவடையும்.

நாட்டை மீண்டும் நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் தொழில்சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பு போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். பொருளாதார மேம்பாட்டுக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் தொழில்சங்க போராட்டங்கள் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.